# வெளியிடுவோர் முன்னுரை

தொன்மைச் சிறப்பு வாய்ந்த இப்பாரத பூமியை அரசாண்ட மன்னர்களின் வரலாற்றை அறியவும், எழுதவும், உதவியாக இருப்பவைகளில் இலக்கியங்களுமொன்று. ஹர்ஷப் பேரரசராக விளங்கிய ஹர்ஷரைப் பற்றி ஹர்ஷ சரித்திரம், விஜய நகரப் பேரரசர்களில் ஒருவரான அச்சுத ராயரைப் பற்றிய நூலான அச்சுத ராயாப்யுதயம், தஞ்சையை அரசாண்ட சகஜியைப் பற்றி சாஹேந்திர விலாசம், போன்ற வரலாற்றைத் தழுவியெழுந்த இலக்கிய வரிசையில் 'ராஜாராம சரித்திரமும்' ஒன்று. ராஜாராமன் தமிழகத்தின் ஒரு பகுதியாக விளங்கும் செஞ்சியை அரசு செலுத்தியவன். இம்மன்னன் சத்ரபதி சிவாஜியின் புதல்வன். இவனுடைய வரலாற்றைக் கூற வந்ததே இந்த நூலாகும்.

இந்த நூலின் ஆசிரியர் கேசவ பண்டிதர். இவர் சத்ரபதி சிவாஜியிடமும், அவரது புதல்வர்களான சம்பாஜி, ராஜாராம் ஆகியோரிடமும், கருவூலக் காப்பாளராகப் பணிபுரிந்தவர். தமிழக அரசும், இந்திய அரசும் இந்திய வரலாற்றை முறைப்படித் தொகுத்துவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இக்காலத்தில், இத்தகைய நூல்கள் வெளிவருவது இன்றியமையாதது.

குறு;

இந்த நூலின் பதிப்பாசிரியர் திரு. டி. எஸ். கோதண்டராமன் அவர்கள் இந்நூலகத்தின் சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர். இவர் இதற்கு முன் 'மந்திர சாஸ்திர சங்கிரகம்' என்ற நூலையும் வெளியிட்டுள்ளார். இந்த நூல் இவரது இரண்டாவது நூலாகும். இது தமிழாக்கத்துடன் வெளிவருகிறது. வடமொழி அறியாதவர்களும் எளிதில் அறிந்துகொள்ள இது உதவும். திரு. டி. எஸ். கோதண்டராமன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த இந்நூலக நிர்வாக அலுவலர் பொறுப்பு வகிக்கும் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும், நூலகத்தின் அச்சக ஊழியர்களுக்கும் எனது பாராட்டுக்கள். இந்நூல் வெளிவரப் பொருளுதவி புரிந்த மைய அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வழக்கம்போல் இந்நூலகத்தின் வெளியீடுகளை வாங்கிப் படித்துப் பயனடையும் வாசகர்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் ஆகியோர் இந்த நூலையும் வாங்கிப் படித்துப் பயனடைய விரும்புகிறேன்.

தஞ்சாவூர்,
22—9—94.

**இ. வேங்கடாசலம்**, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
இயக்குநர் (பொறுப்பு)
சரசுவதி மகால் நூலகம்.

# முன்னுரை

கேசவ பண்டிதரால் எழுதப்பட்டுள்ள ஸ்ரீ ராஜாராம சரிதம் என்ற வடமொழி நூல், வீரசிவாஜியின் குமாரர்களில் ஒருவரான இராஜாராமின் வரலாற்றில் ஒரு சிறு பகுதியைத் தெள்ளத்தெளியக் காட்டுகிறது.

மொத்தம் 276 "அனுஷ்டுப்" எனும் சந்தமுள்ள கவிதைகளைக் கொண்ட இந்தச் சிறு காவியம், ஐந்து ஸர்கங்களாகப் (chapters) பிரிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், ஒவ்வொரு ஸர்கத்தின் முடிவிலும் "முற்றிற்று" போடும்போதும், ஒரே மாதிரியான அமைப்புக் காணப்படவில்லை; ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக அமைந்திருக்கிறது.

கேசவ பண்டிதரை, காளிதாஸர், தண்டி, பாரவி, மாககவி போன்ற மகாகவி என்று கூறமுடியாது. இந்தக் காவியத்தில், கற்பனை வளமோ, அலங்காரச் சிறப்போ (வர்ணனைகளோ), நகரம், கடல், மலை, சூரிய-சந்திர உதயம் முதலானவை பற்றிய வர்ணனைகளோ இல்லை. ஆனால், அதுவே இந்நூலின் தனிச்சிறப்பு எனலாம். அர்த்த-சப்தாலங்காரமுள்ள கவிதைக்கும், கற்பனைக்கும் இடம் இல்லாததால், இதில் கூறப்பட்டுள்ள வரலாற்றுச் செய்திகள், உண்மையோடு உறவு கொண்டுள்ளன என்பதை உணரச்செய்கிறது. எளிய நடை இந்த நூலின் தனிச்சிறப்பாகும்.

இந்நூலாசிரியர், மராத்திய வீரராக விளங்கிய சத்ரபதி சிவாஜியிடமும் அவருடைய மைந்தர்களான சம்பாஜி, இராஜாராம் ஆகியோரிடமும் "தனாத்யக்ஷர்" (கருவூலக் காப்பாளர்) பதவி வகித்தவர். புராண, இதிஹாஸங்களில் செம்மையான பயிற்சி உடையவர். எனவேதான், ஒரு மாபெரும் வரலாற்றை அறிஞர்கள் விரும்பிப் போற்றும் வண்ணம் திட்டமிட்டு, அதற்கேற்ப மாவீரர் சத்ரபதி சிவாஜியின் மைந்தனை நாயகனாக்கி, பரமேஸ்வரன்—நாரதர்—இந்திரன் ஆகியவர்களின் சம்பாஷணை வடிவில் இக்காவியத்தை உருவாக்கியிருக்கிறார். பெண் பாத்திரம் இல்லாதிருப்பதும் இக்காவியத்தின் தனித்தன்மை எனலாம்.

நூலில் விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் நிகழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர் இக்கவிஞர். நிகழ்ச்சிகள் பலவற்றில்—குறிப்பாக, மூன்றாவது ஸர்கத்தில் வருணிக்கப்பட்டுள்ள நவராத்திரித் திருவிழாவில்—நேரடியாகப் பங்கு கொண்டவர். அதனால், கூறப்பட்டுள்ள செய்திகளின் சத்தியத்தன்மை குறித்து வரலாற்று ஆசிரியர்கள் சந்தேகப்படத் தேவையில்லை.

"கர்நாடகம்" என்று இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசம், தற்போதைய தமிழ்நாடுதான் என்று உறுதியாகக் கொள்ளலாம். ஏனென்றால் பதினேழாம் நூற்றாண்டில், பீஜாப்பூரில் சுல்தான்களின் ஆட்சி நிலவியது. கிருஷ்ணா, துங்கபத்ரா நதியோரங்களில் சுதேசத் தலைவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். ஆக, இந்தப் பிரதேசங்களுக்குத் தெற்கேயுள்ள நாட்டை நோக்கியே இராஜாராமர் வந்திருக்கிறார். காரணம், மராத்தியப் படைத்தலைவர்கள் பலர் தமிழ்நாட்டின் வடக்குப் பகுதியில் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்திருக்கிறார்கள். கொள்ளிடக்கரை வரையிலும் மராத்திய மன்னர்கள் வந்திருக்கிறார்கள் என்பது வரலாறு.

1690ஆம் ஆண்டுக்குச் சில ஆண்டுகள் முன்பிருந்து, மராத்திய வரலாற்றை உள்ளபடி அறிவதற்கு இந்த நூல் பேருதவி செய்கிறது.

பாரதத்தின் உண்மையான தேசிய வரலாற்றினை முறைப்படுத்தி எழுதுவதற்கு, மாநில அரசுகளும், மைய அரசும், ஆராய்ச்சியாளர்களும் முனைந்துள்ள இந்தச் சமயத்தில், தமிழ்நாட்டிலுள்ள வரலாற்று ஆசிரியர்களுக்கு, இராஜாராம சரிதம் நம்பத்தகுந்த செய்திப் பெட்டகமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

சரசுவதி மகால் நூலகத்தில் "ஸ்ரீ ராஜாராம சரிதம்" என்ற பெயரில் B. 4863 / D. 4229 / S. 31A எண்ணுள்ள ஒரு சுவடி மட்டுமே உள்ளது. அது பெரும்பாலும் பிழையின்றியிருந்தாலும், ஆங்காங்கே நந்திநாகரி எழுத்துக்களைக் கொண்டதாக இருந்தது. இச்சிறு நூலைத் தமிழ் உரையுடன் வெளியிடுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த முன்னாள் மாவட்ட ஆட்சியர் மற்றும் நூலக இயக்குநர் அவர்களுக்கும், இந்நாள் இயக்குநரும் (பொறுப்பு), தஞ்சை மாவட்ட ஆட்சியருமான உயர்திரு. இ. வேங்கடாசலம், இ. ஆ. ப. அவர்களுக்கும், நூலக நிருவாக அலுவலர் திரு. A. M. முகம்மது யூசுப் அவர்களுக்கும், நூல் வெளியீட்டு மேலாளர் திரு A. பஞ்சநாதன், M.A., M.L.I.S. அவர்களுக்கும், எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை மூலச்சுவடியுடன் ஒப்பிட்டுப் பிழைத்திருத்தம் செய்ததுடன், தமிழ் உரையில் திருத்தம் தேவைப்பட்ட இடங்களில் திருத்தம் செய்தும், மெய்ப்புத் திருத்தம் செய்தும், பிழையின்றி வெளியிட உதவிய நூலக மேநிலை ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீ S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூலைச் சிறப்பாக அச்சிட்டளித்த நூலக அச்சகப் பிரிவினர் அனைவருக்கும் எனது அன்பார்ந்த பாராட்டுக்கள்.

டி. எஸ். கோதண்டராமன்

தஞ்சாவூர்
20—12—93

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

केशवकविकृतं

# ॥ राजारामचरितम् ॥

॥ प्रथमः सर्गः ॥

கேசவ கவியால் இயற்றப்பட்ட

# ராஜாராம சரிதம்

## முதலாவது ஸர்கம்

जयति रघुवंशतिलकः कौसल्यानन्दवर्धनो रामः ।
दशवदननिधनकारी दाशरथिः पुण्डरीकाक्षः ॥ १ ॥

தாமரையொத்த திருக்கண்களை உடையவரும், தசரதரின் மைந்தரும், பத்துத் தலைகளைக் கொண்ட இராவணனை வீழ்த்தியவரும், கௌஸல்யையின் மகிழ்ச்சியை வளர்ப்பவரும், ரகு குலத்தின் திலகம் போன்றவருமான இராமன் வெல்க. 1

नमस्तस्मै मुनीशाय श्रीयुताय तपस्विने ।
सर्वज्ञानाधिवासाय तस्मै वाल्मीकये नमः ॥ २ ॥

முனிவர்களில் சிறந்தவரும், (புகழ்ச்) செல்வத்தை உடையவரும், தவசியும், அறிவனைத்துக்கும் உறைவிடமானவருமான வால்மீகிக்கு நமஸ்காரம். 2

त्रैलोक्याधिपति. श्रियः पतिरसौ रामावतारत्रयं
कृत्वा संविदधे जगत्त्रयमिदं निःकोणपं सर्वतः ।
भूयोऽयं जगतां शिवाय सदयो मानुष्यदेहं दध-
द्राजाराममहीपतिर्विजयते दिल्लीशदर्पापहः ॥ ३ ॥

மூன்று உலகங்களுக்கும் தலைவனும், திருமகள் கேள்வனுமாகிய
நாராயணன், மூன்றுமுறை* இராமனாக அவதாரம் செய்து. மூன்று உலகத்
தையும் அரக்கர் அற்றதாகச் செய்து, மீண்டும், உலக நன்மைக்காகவும்
தில்லித் தலைவனின் செருக்கை அடக்குவதற்காகவும், கருணையோடு மனித 3
வடிவம் தாங்கி இராஜாராம மன்னராகச் சீருடன் விளங்குகிறார்.

प्रणम्य जानकीनाथं राजाराममहीपतेः ।
यशःप्रबन्धं तनुते पण्डितः केशवाभिधः ॥ ४ ॥

ஜானகீநாதனை (ஸ்ரீ ராமசந்த்ரமூர்த்தியை) வணங்கி, கேசவன் என்று
பெயர் கொண்ட புலவர், இராஜாராம மன்னரின் புகழ்க் காவியத்தை 4
எழுதுகிறார்.

श्रीमान्परशुरामोऽसौ यस्मिन् क्षेत्रे प्रपूज्यते ।
तत्क्षेत्रवासी विप्रस्तु विधिज्ञः सत्यवाक् शुचिः ॥ ५ ॥

वेदवेदाङ्गनिपुणः षट्कर्मनिरतः सुधीः ।
भगवद्भक्तिनिष्णातः सर्वप्राणिहिते रतः ॥ ६ ॥

न्यायार्जितधनेनैव कुटुम्बपरिपोषकः ।
शम्भुवर्मणि भूपाले दिष्टधर्ममुपेयुषि ॥ ७ ॥

चिन्तयामास मनसि कथं क्षेमं भवेन्नृणाम् ।
अस्मिन् कलियुगे घोरे महाम्लेच्छजयावहे ॥ ८ ॥

म्लेच्छराजेन सर्वत्र वर्णाश्रमविघातिना ।
धर्मक्षेत्रेषु सर्वेषु नाशितेषु दुरात्मना ॥ ९ ॥

ஸ்ரீ பரசுராமர் போற்றப்படுகிற திருநாட்டில் வாழ்பவரும், வேதியர்
மரபினரும், செய்யப்படவேண்டிய நெறிமுறைகளை அறிந்தவரும், சத்தியம்
பேசுபவரும், தூயவரும், வேத வேதாங்கங்களில் நிபுணரும், [1]அறுவகைக்

---

* பரசுராமர், தசரத ராமர், பலராமர் ஆகிய மூன்று அவதாரங்கள்.

1. சூரியன் உதிக்கும் முன்னரும், உச்சியிலிருக்கும் பொழுதும், மறையும் முன்னரும் செய்யவேண்டிய கால வழிபாடு, விதிமுறைப்படி தலைமுழுகுதல், மந்த்ரஜபம், ஔபாஸனம், அக்னிஹோத்ரம்போன்ற அக்னி காரியங்கள், பஞ்சாயதன ஸாலக்ராமாதி பூஜை, விருந்தினர் உபசரிப்பு, வைச்வதேவம் (அன்றாடம் அறியப்படாமல் செய்யப் படும் பாவங்கள், காய்கறிகளில்–அரிசியில் உள்ள பூச்சிகளுக்கும் பிற ஜந்துக்களுக்கும் அறியாமல் செய்யப்படும் பாவங்களை விலக்கிக்கொள்ளச் செய்யப்படும் சடங்கு) இவை 6 வகை நித்யகர்மா எனப்படும்.

கருமங்களில் ஈடுபட்டிருப்பவரும், நல்லறிவாளரும், இறையன்பில் ஆழ்ந்திருப்பவரும், எல்லா உயிர்களின் நன்மையிலும் ஆர்வமுடையவரும், நியாயமான முறையில் ஈட்டப்பட்ட பொருளைக் கொண்டே குடும்பத்தைக் காப்பாற்றி வருபவருமான கேசவ பண்டிதர் மன்னர் சம்பு வர்மா (சாம்பாஜி) [1]சிரச்சேதம் செய்யப்பட்டதும் சிந்திக்கலானார்.

இந்தக் கலியுகத்தில், கொடுமையான பலம் மிகுந்த மிலேச்சர்கள் (அறம் அறியாத அந்நிய படையெடுப்பாளர்கள்) வெற்றிபெற்று வருகிறார்களே? புனிதமான க்ஷேத்திரங்களையெல்லாம் நாசம் செய்து, எல்லா இடங்இடங்களிலும் நெறிமுறைகளை அழிக்கின்ற கெடுமதி படைத்த மிலேச்ச அரசன் அரசாளும் பொழுது மக்களுக்கு எவ்வாறு நலம் உண்டாகும்?

एवं चिन्तयमानं तं स्वप्नमार्गमुपागतम् ।
शुक्लवर्षे माघमासे शुक्लपक्षे शनेर्दिने ।। १० ।।

चतुर्थ्यां भाविवृत्तान्तं राजारामजयावहम् ।
शिवनारदसंवादरूपेणैव सविस्तरम् ।। ११ ।।

द्विज:स्वप्ने समवदद्भवानीपतिसन्निभः ।

கேசவ பண்டிதர் இவ்விதம் எண்ணியவாறே தன்னுள் ஆழ்ந்து (லயித்து) விட்ட பொழுது சுக்ல ஆண்டு (சக 1611ம் ஆண்டு) மாக மாதம் சுக்லபட்ச சதுர்த்தி சனிக்கிழமையன்று, எதிர்காலத்தில் நிகழவிருக்கும் இராஜாராமரின் வெற்றி வரலாற்றினை, விரிவான சிவ—நாரத உரையாடல் வடிவத்தில், [2]பவாநீ நாயகனை நிகர்த்த ஓர் அந்தணர், கனவில் வந்து கூறினார்.

हिताय सर्वलोकानां भक्तानुग्रहणाय च ।। १२ ।।

कदाचिन्नारदो योगी त्रिदिवं गिरिशालयात् ।
जगाम सत्कृतस्तत्र देवेन्द्रप्रमुखैः सुरैः ।। १३ ।।

ஒரு சமயம் யோகியான நாரதர், அனைத்து மக்களின் நலனை முன்னிட்டும், பக்தர்களை அருள்பாலிப்பதற்காகவும், கைலாய மலையிலிருந்து தேவலோகம் சென்றார். அங்கு தேவேந்திரனை முன்னிட்ட தேவர்களால் வணங்கி வரவேற்கப்பட்டார். மேலும்,

---

1. மராட்டிய மன்னர்களின் குலதெய்வம் "பவானி" என்பதாகும்.

2. 1—2—1689ல் ஔரங்கசிப்பின் படைத்தலைவர்களால் சாம்பாஜி சிறை பிடிக்கப்பட்டு 11—3—1689ல் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

विज्ञापितः प्रश्रयेण भगवान्भुवनत्रये ।
आश्चर्यं किं त्वया दृष्टं हर्षवानिव लक्ष्यसे ॥ १४ ॥

"ஐயனே! மூன்று உலகத்திலும் ஆச்சரியமான ஏதோ ஒன்று தங்களால் காணப்பட்டிருக்கிறதுபோலும். (அதனால்தான்) மகிழ்ச்சியுடையவராகத் (தாங்கள்) காணப்படுகிறீர்கள்!" என்று வணக்கத்துடன் விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டார்.

नारदस्तं तदा प्राह देवेन्द्रममितद्युतिः ।
गौरीपतिं नमस्कर्तुं गतोऽहं रजताचलम् ॥ १५ ॥

அப்போது மிக்க ஒளிபொருந்திய நாரதர், அந்த தேவேந்திரனிடம் கூறினார்: "பரமேஸ்வரனை வணங்குவதற்காக நான் வெள்ளியங்கிரி சென்றிருந்தேன்.

तत्रोमासहितं रुद्रं प्रणम्य पुरतः स्थितः ।
एतस्मिन्नन्तरे शिष्यो भार्गवस्य महात्मनः ॥ १६ ॥

महेन्द्राचलसंस्थस्य समायाद्गिरिशान्तिकम् ।
प्रणम्य दण्डवद्भूमौ बद्धाञ्जलिरभाषत ॥ १७ ॥

"அங்கு உமையோடு கூடிய உருத்திரனை வணங்கி எதிரில் நின்றிருந்தேன். அப்போது மஹாத்மாவான பார்க்கவ முனிவரின் சீடன், சிவ பெருமானிடம் வந்தான்; தரையில் விழுந்து வணங்கி, கைகளைக் கூப்பிய வண்ணம் சொன்னான்:

अन्तेवासी भार्गवस्ते यद्विज्ञापयति प्रभो ॥
श्रूयतां करुणासिन्धो भक्तानां भयभञ्जन ॥ १८ ॥

"அடியார்களின் பயத்தைப் போக்குபவரே! கருணைக்கடலே! பார்க்கவருடைய சீடன் (நான்) சொல்வது, பிரபோ! தங்களால் (தயைகூர்ந்து) கேட்கப்படவேண்டும்.

स्वामिन् सह्याचले पूर्वं दत्वा स्वं परशुं शुभम् ।
स्थापितो दुष्टशिक्षायै भक्तसंरक्षणाय च ॥ १९ ॥

"ஐயனே! முன்பு, அடியார்களைக் காப்பதற்காகவும், தீயவர்களைத் தண்டிப்பதற்காகவும், மங்களமான தங்களது கோடாரியைக் கொடுத்து ஸஹ்ய மலையில்* (என்னை) இருக்கச் செய்தீர்கள்.

* ஸஹ்யமலை — காவேரி உற்பத்தியாகும் மலை;

एतावत्कालपर्यन्तं तवाज्ञा विहिता प्रभो ।
साम्प्रतं कलिकन्देन सार्वभौमाभिमानिना ।। २० ।।

उत्सादितो धर्मसेतुर्हेतुः पुण्यस्य कर्मणः ।
भूमिः पापभराक्रान्ता कर्तव्यं किमतः परम् ।। २१ ।।

"பிரபோ! இந்நாள் வரை தங்கள் ஆணை மதிக்கப்பட்டது. புண்ணியச் செயல்களுக்குக் காரணமான அறவரைமுறையானது, ஸார்வபௌமன் என்ற அகந்தைகொண்ட (பாவச்செயல்களுக்கு மூலக்கிழங்காகவுள்ள) கலிபுருஷனால் தற்பொழுது அழிக்கப்பட்டு (விட்டதால்) பூமியானது பாபச் சுமையால் தவிக்கிறது. ஆகவே, (பாபச் சுமையைக் குறைப்பதற்காக) இனி செய்யவேண்டுவது என்ன?

नास्ति तन्निग्रहे शक्तिर्महेन्द्रादिसुरेष्वपि ।
भूमिपालेषु मुनिषु ब्राह्मणेषु महत्स्वपि ।। २२ ।।

"அவனை அடக்குவதற்கான ஆற்றல் தேவேந்திரன் முதலிய தேவர்களிடமோ, மண்ணுலக மன்னர்களிடமோ, (தேவ ஆற்றல் மிக்க) முனிவர்களிடமோ, (மந்திர வலிமை பெற்றுள்ள) வேதியர்களிடமோ இல்லை.

वैष्णवं दाशरथिना धनुर्नीतं पुरा मम ।
परशुः खण्डितः पूर्वं क्रौञ्चाचलविभेदने ।। २३ ।।

"என்னிடமிருந்த வைணவ வில், (தசரத குமாரனாகிய) இராமனால் முன்னொரு சமயத்தில் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. இன்னொரு சமயம் கிரௌஞ்ச மலையைப் பிளக்கும்போது, (தங்களால் கொடுக்கப்பட்ட) கோடாரியானது உடைந்துபோய்விட்டது*

---

* பிருகு முனிவர் பரம்பரையில் தோன்றிய ரிசிகர் என்பவருக்கும் ஸத்யவதிக்கும் பிறந்தவர், ஜமதக்னி. ஜமதக்னியின் பத்னியின் பெயர் ரேணுகா. இந்தத் தம்பதியரின் ஐந்தாவது குமாரர்தான் பரசுராமர். பரமசிவனுக்கும் மஹாவிஷ்ணுவுக்கும் ஒருசமயம் விளையாட்டாக விற்போர் நடந்தது. அதில் விஷ்ணுவே சிறந்தவராக தேவர்களால் கருதப்பட்டார். போரில் உபயோகப்பட்ட விற்களில் சிறந்ததான விஷ்ணுவின் வில், ரிசிகரிடம் தாற்காலிகமாகக் கொடுக்கப்பட்டு, பரசுராமரிடம் வந்தது.

ऋचीके भार्गवे प्रादाद्विष्णुः सन्न्यासमुत्तमम् । ......
पितुर्मम ददौ दिव्यं जमदग्नेर्महात्मनः ॥

(வால்மீகி ராமாயணம்—பாலகாண்டம் 68வது ஸர்கம்)

இராமாவதாரத்தில், இராமர் இந்த வில்லைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டார். பின்னொரு சமயம், கார்த்திகேயனின் வலிமையைக் கண்டு பொறாமை கொண்ட பரசுராமர் கிரௌஞ்சமலையைத் தனது கோடாரியால் பிளந்ததாகவும் புராண வரலாறு உள்ளது.

इदानीमस्य दमने त्वमुपायं कुरु प्रभो ।
इति विज्ञाप्य शिष्यस्तु तूष्णीमास शिवाग्रतः ॥ २४ ॥

"ஐயனே, இப்போது இந்தக் கலி புருஷனை அடக்குவதற்கு உபாயம் செய்யுங்கள்" என்று சிவபெருமான் திருமுன் விண்ணப்பித்துவிட்டு சீடன் மௌனமானான்.

ततः स भगवानाह मेघगम्भीरया गिरा ।
न भयं कलिकन्दाद्वः सम्भविष्यति भार्गव ॥ २५ ॥

அப்போது, மேகத்தினுடையது போன்ற கம்பீரமான குரலில் பகவானாகிய பரமசிவன் கூறினார்: "பார்கவரே! கலி புருஷனால் உங்களுக்கு எவ்வித பயமும் உண்டாகாது.

कुलाण्डो नाम दैत्येन्द्रस्तपसाऽतोषयद्धि माम् ।
तस्मै दत्तं प्रसन्नेन सार्वभौमपदं मया ॥ २६ ॥

"குலாண்டன் என்ற அசுரத் தலைவன், (கடும்) தவத்தினால் என்னை மகிழச் செய்தான். மகிழ்ச்சியடைந்த என்னால் அவனுக்கு ஸார்வபௌமப் பதவி (அனைத்து பூமியையும் அடக்கியாளும் ஆற்றல்) கொடுக்கப்பட்டது.

अवधिश्च कृतस्तस्य यदा त्वं भार्गवाश्रमम् ।
विलुण्ठयसि दर्पेण रामराज्यं जिघृक्षसि ॥ २७ ॥

तद्राज्यं ब्रह्मभूयिष्ठं तदाप्स्यसि पराभवम् ।

"கர்வம் நிரம்பிய நீ எப்போது பார்கவரின் ஆசிரமத்தைக் கொள்ளையடிக்கிறாயோ, (அல்லது) வேதியர்கள் (ஞானியர்) நிரம்பிய (இராஜா) ராமனின் அரசை (க் கைப்பற்ற) விரும்புகிறாயோ, அப்போது தோல்வியை அடைவாய் என்று காலவரம்பும் குறிக்கப்பட்டது.

भवशालाख्यवंशे हि राजारामो महीपतिः ॥ २८ ॥

ब्राह्मण्यश्च वदान्यश्च हरेरंशः प्रतापवान् ।
सुरांशभूतैः सचिवैर्ब्राह्मणैः क्षत्रियैर्वृतः ॥ २९ ॥

मम भक्तवरः श्रीमानवतीर्णो धरातले ।
कलिकल्मषनाशाय धर्मसंरक्षणाय च ॥ ३० ॥

कुलाण्डस्याभिमानं तु सोऽपनेष्यति साम्प्रतम् ।

"அந்தணர்களை ஆதரிப்பவனும், கொடையாளியும், திருமாலின் அம்ச மாயுள்ளவனும், ஆற்றல் மிக்கவனும், தேவர்கள் அம்சமான அந்தண அமைச்சர்களாலும், க்ஷத்திரியர்களாலும் சூழப்பட்டவனும், என் அடியார்களில் சிறந்தவனும், திருவுடையவனுமான இராஜாராமன், தர்மத்தைக் காப்பதற்காகவும், கலியின் மாசுகளைப்போக்கவும் மண்ணுலகில் பவசால (போன்ஸ்லே) [போஸல] அரச குலத்தில் தோன்றியுள்ளான். இப்போது (அவன்) குலாண்டனின் கர்வத்தை அடக்கப்போகிறான்."

इति श्रुत्वा शिवोद्गीतं शिष्यः प्रायात्कृतानतिः ॥ ३१ ॥

என்று, பரமசிவன் கூறியதைக் கேட்ட சீடன், (நிம்மதியடைந்து) வணங்கிவிட்டுச் சென்றான்.

नारदस्तु ततः स्तुत्वा भगवन्तं सनातनम् ।
प्रश्रयेणावदद्वृत्तं यथादृष्टं महीतले ॥ ३२ ॥

பிறகு நாரதர், மிகப்பழம் பொருளான பகவானைப் பணிவுடன் தோத்தரித்து, மண்ணுலகில் தான் கண்ணால் பார்த்ததைக் கூறினார்.

भगवन् भवतो भक्तो रामवर्मा महीपतिः ।
हृतश्रीः कलिकन्देन सार्वभौमाभिमानिना ॥ ३३ ॥

"எல்லாம் வல்ல இறைவ! அனைத்தையும் ஆள்பவன் என்ற செருக்குடைய கலி புருஷனால், தங்கள் பக்தனாகிய மன்னன் [1]ராமவர்மன் (ராஜாராமன்) பிடுங்கப்பட்ட செல்வத்தையுடையவனாக இருக்கிறான்.[2]

अधुना स कथं स्वीयं राज्यं प्राप्स्यति भूपतिः ।
कृपया तद्वद स्वामिन् दीनबन्धो दयानिधे ॥ ३४ ॥

"எளியோரைக் காப்பவனே! அருட்செல்வமே! இனி அவன் தனது ராஜ்யத்தை எவ்வாறு அடையப்போகிறான்? அண்ணலே! அருள்கூர்ந்து அதனைச் சொல்லவேண்டும்".

---

1. வர்ம என்ற சொல், க்ஷத்ரிய ஆண்களின் பெயரோடு இணைந்து நின்று, அந்த மரபைக் குறிப்பிட்டுக் காட்டுவது.

2. மராத்தியர்களின் கைவசமிருந்த தென்கொங்கணப் பகுதியை, 1689ம் ஆண்டு ஜனவரி மாத வாக்கில், ஷேக் நிஜாம் என்பவன் அனேகமாக அழித்தே விட்டான், ஜுல்பிகர் கான் என்ற சேனைத்தலைவன் 25—3—1689ல் ராயகட் கோட்டையை முற்றுகை யிட்டான்.

भगवांस्तु ततः प्राह नारदं दिव्यदर्शनम् ।
स राजा मम सद्भक्तः सर्वधर्माभिरक्षकः ।। ३५ ।।

ஒளிமயமான தோற்றமுடைய நாரதரைப் பார்த்து பகவான் அப்போது கூறினார்: "அந்த மன்னன் என்னுடைய சிறந்த பக்தன்; அனைத்து அறங்களையும் காப்பாற்றுகிறவன்.

म्लेच्छाक्रान्तं निजं राष्ट्रं दृष्ट्वा स्वीयं बलं तथा ।
नयप्रचारचतुरैरमन्त्रयत मन्त्रिभिः ।। ३६ ।।

"மிலேச்சர்களால் (அந்நிய நாட்டுப் படையெடுப்பாளர்களால்) தனது ராஜ்யம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதையும், தன்னுடைய (பலவீனமான) படையையும் கண்டுணர்ந்து அரசியல் வல்லுநர்களான அமைச்சர்களுடன் ஆலோசனை செய்தான்.

युद्धं तत्राभ्यमन्यन्त केचिच्छूरा जयैषिणः ।
केचिद्दानं साम केचित् भेदं केचित्तथाश्रयम् ।। ३७ ।।

"வெற்றியில் நாட்டமுடைய சில சூரர்கள் போர் புரியவேண்டுமென்றும். சிலர் (ஏராளமான பொருட்களைக் கொடுத்து, நாட்டு மக்களுக்கும் சொத்துகளுக்கும் அழிவு ஏற்படாமல், திருப்தியுறச் செய்து எதிரியைத் திருப்பி அனுப்பிவிடும் முறையான) தான உபாயத்தையும், சிலர் சமாதான உடன்படிக்கையையும், சிலர் (பகைவர்களிடையே) பிளவு உண்டுபண்ணுதல் என்ற முறையையும், மற்றும் சிலர் (எதிரியிடம்) சரண் அடைவதையும் ஆலோசனையாகக் கூறினார்கள்.

इति नानाविधधियो यथाप्रज्ञं समूचिरे ।
मन्त्रिभिर्मन्त्रितं तत्तु नास्पृशन्नृपमानसम् ।। ३८ ।।

"இவ்விதம் தத்தம் அறிவு நிலைக்கேற்றபடி பலவிதமான உபாயங்கள் அமைச்சர்களால் கூறப்பட்டன. ஆனால், அரசனின் மனத்தை (இவை) எதுவும் பற்றவில்லை. (மன்னருக்கு அமைச்சர்களின் அக்கருத்துக்கள் ஏற்புடைத்தாக இல்லை.)

ततो मद्भक्तमुख्येन वृद्धसम्मतबुद्धिना ।
समेन वाचस्पतिना सर्वलोकहितैषिणा ।। ३९ ।।

सर्वश्रीकरणेनाशु श्रीमत्प्रह्लादशर्मणा ।
मद्दत्तमतिसामर्थ्यशालिना बोधितो नृपः ।। ४० ।।

"அப்போது, எனது பக்தர்களில் சிறந்தவரும், வயதுக்கேற்றபடி முதிர்ந்த அறிவுடையவரும், (தேவகுருவான) பிருஹஸ்பதிக்கு நிகரானவரும், எல்லா மக்களின் நலனில் விருப்பம் கொண்டவரும், எல்லாச் செல்வங்களும் பொருந்தியவரும், என்னால் கொடுக்கப்பட்ட அறிவாற்றல் உடையவருமான பிரஹ்லாத சர்மா (பிரஹ்லாத பந்த்) என்ற அமைச்சரால் அரசன் நல்லுபாயம் கூறப்பட்டான்.

राजेन्द्र समयोऽस्माकं विपरीतः परस्य तु ।
अनुकूल इवाभाति तस्माद्युद्धं न रोचये ॥ ४१ ॥

"மன்னனரிற் சிறந்தவரே! இப்போதுள்ள காலம் நமக்கு எதிராகவும், பகைவனுக்கு நன்மை பயக்குவதாகவும் இருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆகவே யுத்தம் செய்வது உகந்ததாகப்படவில்லை.

सामाद्युपायाः सर्वेऽपि निग्रहाय खलस्य हि ।
न प्रीतिं जनयिष्यन्ति पूर्ववैरानुबन्धिनः ॥ ४२ ॥

"உடன்படிக்கை (சாம, தானம்) முதலான வழிகள், கலகக்காரர்களை அடக்குவதற்கு மட்டுமே பயன்படும். நெடுங்காலப் பகைமை பூண்டவர்கள் விஷயத்தில் (இவ்வழிமுறைகள்) திருப்தியான பலனைத் தரமாட்டா.

तस्मात्स्वीयां राज्यधुरं रामचन्द्रे धुरन्धरे ।
अनाहार्ये रामभक्ते विश्वास्ये वीरसम्मते ॥ ४३ ॥

शौर्यौदार्यगुणोपेते यशस्विनि महामतौ ।
अमात्यनीलकण्ठस्य सुते संस्थापय प्रभो ॥ ४४ ॥

"ஆகவே, மன்னரே! அரசியல் நிபுணரும், இயற்கையிலேயே ராம பக்தரும், நம்பிக்கைக்கு உரியவரும், வீரர்களால் போற்றப்படுபவரும், வீரம்–ஈகை முதலான குணமுடையவரும், புகழ்பெற்றவரும், பேரறிவாளருமான அமைச்சர் நீலகண்டருடைய குமாரனாகிய ராமசந்திரனிடம் தங்களது அரசு நிர்வாகப் பொறுப்பை ஒப்படையுங்கள்.

त्वं तु कैश्चिन्नरैर्युक्तः कर्णाटं गच्छ सत्वरम् ।
स्वराज्यरक्षणे यत्नं कुरु राजन्नतन्द्रितः ॥ ४५ ॥

"தாங்கள் சில பேர்களோடு விரைவாகக் கர்நாடகம் (தென்பகுதி) செல்லுங்கள். அரசே, (தோல்விகளால்) சோர்வடையாமல் தங்கள் அரசைக் காக்கும் முயற்சியைச் செய்வீராக."

इति प्रह्लादवचनं सुराचार्यनयानुगम् ।
सम्मतं मन्त्रिमुख्यस्य नीलकण्ठस्य धीमतः ॥ ४६ ॥

श्रीमोरेश्वरपुत्रस्य शुभवैभवशालिनः ।
श्रुत्वा विभाव्य मनसि हर्षं प्राप्यातुलं नृपः ॥ ४७ ॥

இவ்விதம், (தேவர்களின் குலகுருவான) பிருஹஸ்பதியின் அரசியல் ஆலோசனை போன்றதான பிரஹ்லாத சர்மாவின் சொல்லுக்கிணங்க, ஸ்ரீ மோரேஸ்வரரின் மைந்தரும், நல்லாற்றல் மிக்கவரும், முக்கியமந்திரியும், அறிவாளியுமான நீலகண்டரின் இசைவைக் கேட்டு, மனத்தில் ஆராய்ந்து, மன்னர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து...

रामचन्द्राख्यसचिवे मौले राज्यधुरन्धरे ।
राज्यं विन्यस्य सकलं राज्याङ्गविकलं प्रभुः ॥ ४८ ॥

सार्धं प्रधानपुरुषैः प्रह्लादप्रमुखैर्द्विजैः ।
मार्गे बहुविधान्विघ्नान् विनिवार्य महामतिः ॥ ४९ ॥

भैरजीकं घोरफडं सुग्रीवसमविक्रमम् ।
मित्रं लब्ध्वा महाबाहुर्महासाहसिकं बली ॥ ५० ॥

मदेकभक्तियोगेन कर्णाटं प्राप्स्यति ध्रुवम् ।

பேரறிவு பெற்ற அரசர், அரசியல் வல்லுநரான ராமச்சந்திரர் என்ற அமைச்சரிடம் படைபலம்–கோட்டை பலம் போன்ற துணையில்லாத அரசுப் [illegible]றுப்பினை ஒப்படைத்துவிட்டு, பிரஹ்லாதர் முதலிய பிரதானிகளுடனும், [illegible]யோர்களுடனும் கூட, வழியில் எதிர்ப்பட்ட பற்பல இடையூறுகளை வ[illegible]கொண்டு, சுக்ரீவனுக்கு இணையான பலம் பொருந்தியவரும் அஞ்[illegible]ாக்குபவருமான பஹிர்ஜீ கோர்படே, என்பவரைப் பலவானான மன்ன[illegible]ராகப் பெற்று, என் மேலுள்ள அயராத பக்திப் பெருக்கினால் [illegible]த்தை அடையப்போகிறான்.

எதுவும் ப[illegible]
ஏற்புடைத்தாக இ[illegible] [illegible]सते ॥ ५१ ॥

ततो मञ्जु[illegible] ।
समेन वाचस्पति[illegible]

सर्वंश्रीकरणेनाशु श्रीमत्प्रह्लाद[illegible]
मद्दत्तमतिसामर्थ्यशालिना बोधितो नृपः ॥ [illegible]

इति श्रुत्वा नारदस्तु शङ्करं प्राह विस्मितः ॥ ५२ ॥

இதைக்கேட்டு வியப்படைந்த நாரதர் சங்கரரை வினவினார்.

ब्राह्मणः साधनैर्हीनः कण्टकैः परिवेष्टितम् ।
रामचन्द्रः कथं राज्यमनङ्गं पालयिष्यति ॥ ५३ ॥

"ராமசந்திரரோ, அந்தணர்; தேவையான படை, கோட்டை முதலான வசதிகள் இல்லாதவர். முட்களால் (விரோதிகளால்) சூழப்பட்ட, கட்டுக் கோப்பில்லாத அரசை எவ்வாறு நிர்வாகம் செய்யப்போகிறார்?

ततोऽब्रवीद्भवानीशो नारदं परमादरात् ।
राजारामस्य सद्भक्तेर्मया साम्राज्यमर्पितम् ॥ ५४ ॥

அப்போது, பவானியின் பதியான பரமேஸ்வரன் மிக்க பரிவுடன் நாரதரிடம் சொன்னார்: "நல்லுள்ளம் கொண்ட பக்தனாகிய இராஜா ராமனுக்கு இப்பேரரசை நான் அளித்திருக்கிறேன்.

हरेश्चतुर्थोऽवतारो रामवर्मा ह्यसंशयम् ।
तत्सेवानिरतस्यास्य द्विजस्यावेहि वैभवम् ॥ ५५ ॥

"ராமவர்மா (இராஜாராமன்) விஷ்ணுவின் நான்காவது* இராமாவதாரம் என்பதில் ஐயமில்லை. அவனுடைய பணியில் ஈடுபட்டுள்ள இந்த அந்தணருக்கும் அந்தப் பெருமை வந்துசேரும் என அறிவாயாக.

राजारामनृपे स्वीयैः गते कर्णाटकं तदा ।
इति श्रीरामसचिवः परां चिन्तामवाप्स्यति ॥ ५६ ॥

மன்னன் இராஜாராமன், உடன் வந்தவர்களுடன் கர்நாடகத்தை நோக்கிச் சென்றதும், அமைச்சர் ஸ்ரீ ராமசந்திரர் எனும் மந்திரி பின்வரும் விதத்தில் மிகவும் கவலைக்கு உள்ளவார்.

पालितं वीरमुख्यैर्यच्छ्रीशिवप्रमुखैर्नृपैः ।
मोरेश्वरप्रभृतिभिः प्रधानपुरुषैरिदम् ॥ ५७ ॥

"மாபெரும் வீரர்களாலும், வீரசிவாஜி போன்ற மன்னர்களாலும், மோரேஸ்வரர் போன்ற சான்றோர்களாலும் பரிபாலிக்கப்பட்ட இந்த நாடு,

---

* மூன்று இராமாவதாரங்களைப் பற்றிய விளக்கம், சுலோகம் 3-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

इति प्रह्लादवचनं सुराचार्यनयानुगम् ।
सम्मतं मन्त्रिमुख्यस्य नीलकण्ठस्य धीमतः ॥ ४६ ॥

श्रीमोरेश्वरपुत्रस्य शुभवैभवशालिनः ।
श्रुत्वा विभाव्य मनसि हर्षं प्राप्यातुलं नृपः ॥ ४७ ॥

இவ்விதம், (தேவர்களின் குலகுருவான) பிருஹஸ்பதியின் அரசியல் ஆலோசனை போன்றதான பிரஹ்லாத சர்மாவின் சொல்லுக்கிணங்க, ஸ்ரீ மோரேஸ்வரரின் மைந்தரும், நல்லாற்றல் மிக்கவரும், முக்கியமந்திரியும், அறிவாளியுமான நீலகண்டரின் இசைவைக் கேட்டு, மனத்தில் ஆராய்ந்து, மன்னர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்து...

रामचन्द्राख्यसचिवे मौले राज्यधुरन्धरे ।
राज्यं विन्यस्य सकलं राज्याङ्गविकलं प्रभुः ॥ ४८ ॥

सार्धं प्रधानपुरुषैः प्रह्लादप्रमुखैर्द्विजैः ।
मार्गे बहुविधान्विघ्नान् विनिवार्य महामतिः ॥ ४९ ॥

भैरजीकं घोरफडं सुग्रीवसमविक्रमम् ।
मित्रं लब्ध्वा महाबाहुर्महासाहसिकं बली ॥ ५० ॥

मदेकभक्तियोगेन कर्णाटं प्राप्स्यति ध्रुवम् ।

பேரறிவு பெற்ற அரசர், அரசியல் வல்லுநரான ராமச்சந்திரர் என்ற அமைச்சரிடம் படைபலம்-கோட்டை பலம் போன்ற துணையில்லாத அரசுப் பொறுப்பினை ஒப்படைத்துவிட்டு, பிரஹ்லாதர் முதலிய பிரதானிகளுடனும், பெரியோர்களுடனும் கூட, வழியில் எதிர்ப்பட்ட பற்பல இடையூறுகளை விலக்கிக்கொண்டு, சுக்ரீவனுக்கு இணையான பலம் பொருந்தியவரும் அஞ்சாமல் தாக்குபவருமான பஹிர்ஜீ கோர்படே, என்பவரைப் பலவானான மன்னன் நண்பராகப் பெற்று, என் மேலுள்ள அயராத பக்திப் பெருக்கினால் விரைவில் கர்நாடகத்தை அடையப்போகிறான்.

तत्र गत्वा राजगडोपत्यकाञ्चिन्दिपत्तने ॥ ५१ ॥

महेन्द्रनगरीरम्ये साम्राज्यं स विधास्यति ।

"அங்கு சென்று ராஜகட் (ராஜகிரி) அடிவாரத்தில் உள்ள மஹேந்திரபுரி போன்ற அழகான செஞ்சி நகரத்தில் பேரரசு செலுத்தப்போகிறான்."

इति श्रुत्वा नारदस्तु शङ्करं प्राह विस्मितः ॥ ५२ ॥

இதைக்கேட்டு வியப்படைந்த நாரதர் சங்கரரை வினவினார்.

ब्राह्मणः साधनैर्हीनः कण्टकैः परिवेष्टितम् ।
रामचन्द्रः कथं राज्यमनङ्गं पालयिष्यति ॥ ५३ ॥

"ராமசந்திரரோ, அந்தணர்; தேவையான படை, கோட்டை முதலான வசதிகள் இல்லாதவர். முட்களால் (விரோதிகளால்) சூழப்பட்ட, கட்டுக் கோப்பில்லாத அரசை எவ்வாறு நிர்வாகம் செய்யப்போகிறார்?

ततोऽब्रवीद्भवानीशो नारदं परमादरात् ।
राजारामस्य सद्भक्तेर्मया साम्राज्यमर्पितम् ॥ ५४ ॥

அப்போது, பவானியின் பதியான பரமேஸ்வரன் மிக்க பரிவுடன் நாரதரிடம் சொன்னார்: "நல்லுள்ளம் கொண்ட பக்தனாகிய இராஜா ராமனுக்கு இப்பேரரசை நான் அளித்திருக்கிறேன்.

हरेश्चतुर्थोऽवतारो रामवर्मा ह्यसंशयम् ।
तत्सेवानिरतस्यास्य द्विजस्यावेहि वैभवम् ॥ ५५ ॥

"ராமவர்மா (இராஜாராமன்) விஷ்ணுவின் நான்காவது* இராமாவதாரம் என்பதில் ஐயமில்லை. அவனுடைய பணியில் ஈடுபட்டுள்ள இந்த அந்தணருக்கும் அந்தப் பெருமை வந்துசேரும் என அறிவாயாக.

राजारामनृपे स्वीयैः गते कर्णाटकं तदा ।
इति श्रीरामसचिवः परां चिन्तामवाप्स्यति ॥ ५६ ॥

மன்னன் இராஜாராமன், உடன் வந்தவர்களுடன் கர்நாடகத்தை நோக்கிச் சென்றதும், அமைச்சர் ஸ்ரீ ராமசந்திரர் எனும் மந்திரி பின்வரும் விதத்தில் மிகவும் கவலைக்கு உள்ளவார்.

पालितं वीरसुवर्यैश्चश्रीशिवप्रमुखैर्नृपैः ।
मोरेश्वरप्रभृतिभिः प्रधानपुरुषैरिदम् ॥ ५७ ॥

"மாபெரும் வீரர்களாலும், வீரசிவாஜி போன்ற மன்னர்களாலும், மோரேஸ்வரர் போன்ற சான்றோர்களாலும் பரிபாலிக்கப்பட்ட இந்த நாடு,

---

* மூன்று இராமாவதாரங்களைப் பற்றிய விளக்கம், சுலோகம் 3-ல் சொல்லப்பட்டிருக் கிறது.

*सप्ताङ्गसहितं राज्यं पराभेद्यं समृद्धिमत् ।
इदानीमङ्गविकलं पालयामि कथं त्विदम् ॥ ५८ ॥

பிறரால் தகர்க்க முடியாததாகவும், வளம் மிக்கதாகவும், ஏழுவகை அங்கங்களோடு கூடியதாகவும் இருந்ததே! இப்போது கலகலத்துக் கிடக்கும் இதனை எவ்வாறு நிர்வாகம் செய்வேன்?" எனக் கவலைப்படப்போகிறார்.

इति चिन्तयतस्तस्य स्वप्ने श्रीजानकीपतिः ।
द्विजवर्यस्वरूपेण श्रीफल संप्रदास्यति ॥ ५९ ॥

இந்நிலையில் அவருடைய கனவில், ஸ்ரீஸீதாபதியான இராமன், மேலான அந்தண உருவில் வந்து வில்வப்பழத்தைக் கொடுக்கப்போகிறார்.

तदा हि शौर्यधैर्यादिगुणास्तस्मिन्महामतौ ।
प्रादर्भूता भविष्यन्ति शूराणां सौख्यवर्धनाः ॥ ६० ॥

அதுசமயம், அறிவிற்சிறந்த ராமசந்திரரிடம் சூரர்களுக்கு மகிழ்ச்சியைப் பெருக்கக்கூடிய உடல்வலிமை, மனவலிமை முதலிய குணங்கள் தோன்றப் போகின்றன.

ततः प्रभृति भूपस्य सम्मतः सचिवोत्तमः ।
राजारामस्य तद्राज्यं गिरिदुर्गाणि भूरिशः ॥ ६१ ॥

म्लेच्छराजगृहीतानि गिरिदुर्गाणि भूरिशः ।
म्लेच्छराजगृहीतानि विद्रुतानि बलानि च ॥ ६२ ॥

सत्यवाक्यामृतेनैव संग्रहीष्यति सत्वरम् ।
म्लेच्छनाथचमूनाथान् जेष्यति स्वबलैस्तथा ॥ ६३ ॥

அதுமுதற்கொண்டு, மன்னர் ராஜாராமனுக்குப் பிரிய மந்திரியான ராமசந்திரர், இராஜாராமனின் அரசைச் சேர்ந்த பல மலைக்கோட்டைகளையும், அந்நிய மன்னனால் கைப்பற்றப்பட்ட அநேக மலைக்கோட்டைகளையும், மிலேச்ச அரசனால் கைது செய்யப்பட்டனவும், பயந்து ஓடி ஓடிவிட்டதுமான படைகளையும். அமுதுக்கொப்பானதும், சத்தியமானதுமான எனது வார்த்தைகளின் பயனாய் விரைவில் கைப்பற்றப் போகிறான், அவ்விதமே மிலேச்ச மன்னனின் படைத் தலைவர்களையும் தன் பலத்தால் வெற்றிகொள்ளப்போகிறான்.

---

* स्वामी-अमात्य-सुहृत्-कोश-राष्ट्र-दुर्ग-बलानि एतानि सप्त राज्याङ्गानि भवन्ति ।

सर्वेषु दुर्गदेशेषु राजाराममहीपतेः ।
म्लेच्छराजगृहीतेषु शासनं वितनिष्यति ।। ६४ ।।

மிலேச்ச மன்னனால் கைப்பற்றப்பட்டதான, இராஜாராம மன்னரின் எல்லாக் கோட்டைப் பிரதேசங்களையும் ஆட்சி செலுத்தப்போகிறான்,

सचिवानुष्ठितं त्वेवं संश्रुत्य स महीपतिः ।
संप्रहृष्टमना भूत्वा स्वदेशबलसंयुतः ।। ६५ ।।

कार्णाटबलसम्पन्नः सर्वैश्वर्ययुतः प्रभुः ।
म्लेच्छराजं पराजित्य सम्मान्य सचिवोत्तमम् ।। ६६ ।।

कलत्रपुत्रसम्पन्नः प्रधानपुरुषैर्वृतः ।
रायदुर्गे गिरिवरे स्थित्वा सिंहासनोत्तमे ।। ६७ ।।

श्रीसीतापतिवत्सर्वां पालयिष्यति मेदिनीम् ।

மன்னன் ராஜாராமன் தமது மந்திரியால் மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளை (கோட்டை கொத்தளங்களைக் கைப்பற்றிய செய்தியை)க் கேள்வியுற்று மகிழ்ச்சியுடையவனாக ஆகி, தனது நாட்டுப் படையுடனும் கர்னாடகப் படையுடனும் எல்லாச் செல்வங்களுடனும் கூடியவனாக அந்நிய நாட்டு மன்னனை வென்று, உத்தமமான அமைச்சருக்கு (ராமச்சந்திரருக்கு) மரியாதை செய்து கௌரவித்து, மனைவி-மக்களோடும், பிரதானிகளுடனும் கூடியவனாக, உன்னதமான மலையாகிய ராயதுர்கத்தில் அரியணையில் அமர்ந்து, ஸ்ரீ ஸிதாநாயகனைப்போல பூமியை ஆளப்போகிறான்,

इति शम्भुमुखात् श्रुत्वा भाविवृत्तं महीपतेः ।। ६८ ।।

राजारामस्य मघवन् हर्षोऽस्माकं महानभूत् ।। ६९ ।।

என்று பரமேஸ்வரனின் திருவாயிலிருந்து மன்னன் ராஜாராமனுடைய எதிர்காலத்தில் நடக்கப்போகும் செய்திகளைக் கேட்டு, அமரர்கோனே! எமக்கு மிகவும் குதூகலம் உண்டாயிற்று."

स्वप्नमेवंविधं दृष्ट्वा प्रतिबुध्य द्विजोत्तमः ।
अतुलं हर्षमापेदे चिन्ताभयविवर्जितः ।। ७० ।।

இவ்விதமாகக் கனவினைக் கண்டு விழித்துக்கொண்ட அந்த உத்தம அந்தணர், கவலையும் அச்சமும் நீங்கியவராகி, எல்லையற்ற ஆனந்தம் அடைந்தார்,

श्रुत्वा तत्स्वाप्नवृत्तं द्विजवरगदितं लोकसन्तोषबीजं
राजारामस्य नित्यं विजयविभवदं पण्डितः केशवाख्यः ।
आनन्दाब्धौ निमग्नः समरचयदमुं रामराजप्रभावं
स्वीयैः पद्यैरनेकैरिह वदति पुरस्तत्प्रधानप्रभावम् ।। ७१ ।।

சிறந்த அந்தணரால் கூறப்பட்ட, மக்கள் மகிழ்ச்சிக்கு விதை போன்றதும், இராஜாராமருக்கு நீண்டகாலம் வெற்றிப் பெருமைகளை அளிப்பதுமான அந்தக் கனவுச் செய்திகளைக் கேட்டு, கேசவர் என்று பெயர் கொண்ட அறிஞர், ஆனந்தக்கடலில் மூழ்கி இராஜாராமரின் பெருமைகளைக் கூறும் இதனை (இந்தக் காவியத்தை) இயற்றினார். இனி, தன்னுடைய பல செய்யுட்களில் (இராஜாராமனின்) சிறப்பான பெருமைகளைக் கூறுகிறார்.

|| इति श्रीराजारामचरिते केशवपण्डितकृतौ स्वप्नवृत्तं नाम प्रथमः सर्गः ||

கேசவ பண்டிதரால் இயற்றப்பட்ட ஸ்ரீராஜாராம சரித்ரத்தில் "கனவுச்செய்தி" என்ற முதல் ஸர்கம் முற்றிற்று.

## ।। द्वितीयः सर्गः ।।

## இரண்டாவது ஸர்கம்

कर्णाटकगतं भूपं श्रुत्वा स यवनेश्वरः ।
बलानि प्राहिणोत्तत्र स्वयमन्वगमद्बली ।। १ ।।

மன்னர் (இராஜாராமன்) கர்நாடகம் சென்றுவிட்டதைக் கேட்ட அந்த யவனேஸ்வரன (அவுரங்கஜிப்), அங்கு சைன்யங்களை அனுப்பியதுடன் தானும் படையுடன் பின்தொடர்ந்தான்.

रामचन्द्रस्य विषये संस्थाप्य म्लेच्छनायकान् ।
*वसतीर्विंशतीर्गत्वा शुश्राव नृपविक्रमम् ।। २ ।।

இராமசந்திர பிரதேசத்தில் மிலேச்சத் தலைவர்களை நிறுத்திவிட்டு, இருபது இரவுகள் சென்ற பிறகு மன்னர் ராஜாராமருடைய வீரச்செயல்களைப் பற்றிய செய்திகளைக் கேட்டான். (அதற்குள், மன்னர் ஏறக்குறைய இருபது நாட்கள் பிரயாணம் சென்றுவிட்டார் என்பது கவிஞரின் கருத்து.)

कर्णाटविषयैर्भूपैरेकीभूय महीपतेः ।
उपायनानि दत्तानि धनानि विविधानि च ।। ३ ।।

கர்நாடகப் பிரதேச அரசர்கள் ஒன்றுசேர்ந்து, மன்னர் ராஜாராமரிடம் பலவகைப்பட்ட பரிசுகளையும், பொருட்களையும் அளித்தார்கள்.

सेना बहुविधाः स्वीया दानमानप्रतोषिताः ।
प्रेषितास्तस्य सेवार्थं म्लेच्छसम्मर्दनक्षमाः ।। ४ ।।

பொருளாலும், கௌரவத்தாலும் சந்தோஷப்படுத்தப்பட்டதும், அந்நியப் படையெடுப்பாளர்களை எதிர்க்கும் ஆற்றல் படைத்ததுமான தங்களது பலவிதமான படைகளை, அவரிடம் பணி செய்வதற்கு அனுப்பி வைத்தார்கள்.

स्वमित्रबलसम्पन्नो राजारामः प्रतापवान् ।
युद्धायागच्छतीत्येतत् श्रुत्वा दीनमनाः स्वयम् ।। ५ ।।

வீரம் மிகுந்த இராஜாராமர், தம்முடையதும் நண்பர்களுடையதுமான படைகளுடன் போருக்கு வருகிறார் என்பதைக் கேட்டறிந்து, (அந்த மிலேச்ச அரசன்) மனம் தளர்ந்து போனான்.

---

* वसतिः — The time when one halts to rest night.

तद्भयेनैव मार्गेऽसौ न्यवसत्पृतनावृतः ।
तत्प्रयुक्तानि सैन्यानि कष्टेन पुरतोऽगमन् ॥ ६ ॥

அந்த அச்சத்தினால், படையின் ஒரு பகுதியைத் தன்னைச் சூழ்ந்திருக்கச் செய்துகொண்டு, நடுவழியிலேயே அவன் தங்கிவிட்டான். அவனால் அனுப்பப் பட்ட படையினர் சிரமப்பட்டுக்கொண்டு முன்நோக்கிச் சென்றனர்.

एतस्मिन्नन्तरे म्लेच्छनायकैर्देशविप्लवः ।
प्रारब्धो गिरिदुर्गाणि संगृहीतानि कानिचित् ॥ ६ ॥

இதனிடையில் அந்நியப் படைத் தலைவர்களால் உள்நாட்டுப் புரட்சி துவக்கப்பட்டது. சில மலைக்கோட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

वेष्टितानि पराण्यासन् स्वीयाश्च परपक्षगाः ।
जातास्तदा रामचन्द्रश्चिन्तयामास चेतसि ॥ ७ ॥

புனிதத் தலங்கள் (விரோதிகளால்) சூழப்பட்டுவிட்டன. தன்னுடைய வர்களும், எதிரியின் பக்கம் சென்றுவிட்டார்கள் என்றபோது, ராமச்சந்திர பந்த் மனதில் (கவலைகொண்டு) சிந்திக்கலானார்.

राज्ञा मद्धस्तविन्यस्तं राज्यमेतज्जिघृक्षवः ।
परितो यवनाः प्राप्ताः सर्वाङ्गविकलं त्विदम् ॥ ९ ॥

மன்னனால் என் கையில் ஒப்படைக்கப்பட்ட இந்த ராஜ்யத்தைக் கைப்பற்ற விரும்பும் யவனர்கள் (அந்நிய நாட்டுப் படையெடுப்பாளர்கள்— அவுரங்கஜீப்பின் படை வீரர்கள்) சூழ்ந்து நிற்கிறார்கள். இந்த அரசோ வென்றால் எல்லாத் துறைகளிலும் (*அங்கங்களிலும்) முடமாகிக் கிடக்கிறது

राज्यं कथं मया रक्ष्यं सत्यसन्धेन मानिना ।
रिपुर्महाबलः श्रीमान् निकटे वर्तते मम ॥ १० ॥

दूरदेशस्थितः स्वामी महाराजोऽधुना मम ।

"சொன்ன சொல் தவறாதவனும், தன்மானம் உள்ளவனுமான என்னால் இந்நாடு எவ்விதம் பாதுகாக்கத் தக்கது? மிக்க பலம் பொருந்திய வனும் பொருட்செல்வத்தோடு கூடியவனுமான எதிரி, என் அருகே நிற்கிறான்! என்னுடைய தலைவராகிய மாமன்னரோ, இந்த வேளையில் தொலைவிலுள்ள நாட்டில் இருக்கிறார்.

---

* ஒரு அரசின் ஏழு அங்கங்கள் பற்றிய குறிப்பு முன்னால் எழுதப்பட்டுள்ளது.

इत्येवं चिन्तितार्थस्य स्वप्ने सीतापतिः स्वयम् ॥ २१ ॥
चिन्तामणिस्वरूपेण श्रीफलं दत्तवांस्तदा ।

இவ்வாறு கவலைப்பட்டுக் கொண்டிருந்தவருடைய கனவில், ஸீதா நாயகரான இராமர், தானே தோன்றி சிந்தாமணி வடிவில் வில்வக்கனியைக் கொடுத்தார்.

प्रातः स्वप्नं द्विजाग्र्यान् स श्रावयित्वा द्विजाग्रणीः ॥ २२ ॥

सर्वे तं भूसुराः प्रोचुर्विजयस्तव सम्प्रति ।
भविष्यति न सन्देहो रामाङ्घ्रिन्यस्तचेतसः ॥ २३ ॥

சிறந்த அந்தணராகிய அவர், பொழுது விடிந்ததும், அந்தணப் பெரியோர்களிடம் கனவைத் தெரிவித்தார். அவ்வந்தணர்கள் அனைவரும் "இராமபிரானின் பாதத்தில் மனம் ஒன்றியுள்ள உமக்கு இப்போது வெற்றி ஏற்படப்போகிறது; ஐயமே இல்லை" என்று கூறினார்கள்.

इति द्विजवचः श्रुत्वा स प्रभुः प्रीतिमानभूत् ।

வேதியர்களின் சொல்லைக் கேட்டு அந்தப் பெரியவர் உளம் மகிழ்ந்தார்.

स्वीयेषु दुर्गदुर्गेषु समाक्रान्तेषु शत्रुभिः ॥ १४ ॥

न चचाल निजस्थानात् संक्षुब्धोऽब्धिरिवापरः ।

தன்னுடைய பிறர் புகமுடியாத கோட்டை கொத்தளங்கள் விரோதிகளால் ஆக்ரமிக்கப்பட்ட போதிலும், கலங்கிய கடல்போன்று தம்மிடத்தினின்றும் அசையவில்லை (உறுதியாக இருந்தார்).

श्रीमत्परशुरामाख्यस्तदा क्षत्रियवृत्तिमान् ॥ २५ ॥

रामचन्द्रकराम्भोजसंजातः प्रथितः क्षितौ ।
तद्धितैषी तद्यशोऽर्थी तत्सेवानिरतः शुचिः ॥ २६ ॥

एकान्ते सुखमासीनं तं विज्ञापयति स्म सः ।

ராமசந்திரரால் வளர்க்கப்பட்டவரும், உலகில் புகழ் பெற்றவரும், க்ஷத்திரியத் தொழிலை மேற்கொண்டவரும் (படைத்தலைவர்); சீர்வளர் பரசுராமன் என்று பெயர் கொண்டவரும், அவருடைய (ராமசந்திர பந்த் அவர்களுடைய) நலனைக் கோருபவரும், அவருடைய புகழை நாடுபவரும், அவர் சேவையில் ஆழ்ந்துள்ளவரும், தூயவருமாகிய பரசுராம த்ரியம்பக் என்ற

முதன்மைப் படைத்தலைவர், தனியே அமைதியாக அமர்ந்திருந்த அவரிடம் (அமைச்சர் ராமசந்திர பந்திடம்) பின்வருமாறு விண்ணப்பித்துக் கொண்டார்.

स्वामिन् राज्यमिदं राज्ञा न्यस्तं त्वद्धस्तपञ्जरे ॥ २७ ॥

"தலைவ! இந்த அரசு, மன்னரால் தங்கள் கையில் ஒப்படைக்கப் பட்டது.

लुण्ठितं सकलैर्म्लेच्छैः स्वीयैरपि दुरात्मभिः ।
दुर्गाणि सङ्गृहीतानि स्वीयैरपि परैरपि ॥ २८ ॥

"(இந்த நாடு) நம்முடைய மக்களில் கயவர்களாக இருந்தவர்களாலும், எல்லா அந்நியர்களாலும் கொள்ளையடிக்கப்பட்டது. நம்மவராலும் பிறராலும் கோட்டைகள் கைப்பற்றப்பட்டன.

विशालगिरिदुर्गं हि साम्प्रतं विद्यते तव ।
अत्रापि दुर्गसामग्री परिपूर्णेव भाति मे ॥ १९ ॥

"விசால்கட் மலைக்கோட்டை மட்டும் தற்சமயம் தங்கள் வசம் இருக்கிறது. இங்கு கோட்டைப் பாதுகாப்புக்கான தளவாடங்கள் நிறைய இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது.

परितो यवनाक्रान्तो देशः सम्प्रति वर्तते ।
दूरदेशे स्थितः स्वामी कोशस्ते विपुलः प्रभो ॥ २० ॥

"நாடு, சுற்றிலும் யவனர்களால் ஆக்கிரமிக்கப்பட்டதாக இருக்கிறது. நமது தலைவர் தொலைவில் உள்ள நாட்டில் இருக்கிறார். முதல்வரே, தங்களிடமுள்ள கருவூலம் நிரம்பியிருக்கிறது.

तदिदानीं विक्रमस्व परेषां विजयाय भोः ।

"ஆகவே, ஐய! அந்நியரை வெற்றி கொள்வதற்கு இப்போதே வீரச் செயலை மேற்கொள்ளுங்கள்."

इति तद्वचनं श्रुत्वा स्मितं कृत्वा महामतिः ॥ २१ ॥
रामं परशुपूर्वं तं जिगीषुः प्रशशंस ह ।

அவருடைய (பரசுராமருடைய) இந்தச் சொற்களைக் கேட்டு, பேரறிவாளரான அவர் (அமைச்சர் ராமசந்திர பந்த்) புன்னகை புரிந்து, வெற்றியில் விருப்பமுடையவராகிப் பரசுராமனைப் புகழ்ந்தார்.

ततो निजामशिक्षायै सन्ताजीकं महाबलम् ।। २२ ।।
उपनाम्ना घोरफडं धनाजी जाधवं तथा ।
वीरमान्यं वीरतरं समादिश्य प्रहर्षितः ।। २३ ।।
प्रस्थानतूर्यनिनदं कारयामास तत्क्षणम् ।

பின்னர், நிஜாமைத்[1] தண்டிக்கும் ஸந்தாஜீ கோர்படேயையும் (க்கும்) வீரர்களால் மதிக்கப்படுபவரும், சிறந்த வீரருமான தானாஜீ ஜாதவ் அவர்களையும் (களுக்கும்) ஆணையிட்டுவிட்டு, மகிழ்ச்சியோடு, அப்போதே புறப்பாட்டுக்கான பேரிகை வாத்திய முழக்கத்தைச் செய்வித்தார்.

ततः श्रीसचिवः सैन्यैः षड्विधैः परिवारितः ।। २४ ।।
सुमुहूर्ते शुभे लग्ने प्रस्थानमकरोत्प्रभुः ।

பின்னர், அறுவகைப் படைகளாலும்[2] சூழப்பட்ட திருவுடை அமைச்சர் நல்ல முகூர்த்தத்தில், நல்ல லக்னத்தில் பயணத்தைத் தொடங்கினார்.

महिमत्तगिरिं गत्वा सङ्गमेशपुरं प्रति ।। २५ ।।
गत्वा तत्र यमूनाथं प्रबलं युद्धदुर्मदम् ।
पराजित्य तदश्वांस्तान्गृहीत्वा युद्धलालसः ।। २६ ।।
भारेरायमुखांश्चोरान्शृङ्गारपुरवासिनः[3] ।
वन्दीकृत्यागमत्तूर्णं गुणवन्तगडं प्रति ।। २७ ।।

மஹிமத்கட் சென்று, (அங்கிருந்து) சங்கமேசபுரம் நோக்கிச் சென்று, கடுமையாகச் சண்டையிடக் கூடியவனும், பலம் பொருந்தியவனுமான மிலேச்ச படைத்தலைவனை வென்று, அவனுடைய குதிரைகளைக் கைப்பற்றினார்.

---

1. இவன் பெயர், கான்-இ-ஜமான் பதேஹ்-ஜங்-கான் அல்லது சேக் நிஜாம் என்பது வரலாறு.

2. ஒரு கருவியிலிருந்து புறப்பட்டுச் சென்று தாக்குகிற வில்-அம்பு, கவண், நெருப்பு வளையம்; கையில் வைத்துக்கொண்டு இலக்கினை நோக்கி வீசக்கூடிய சூலம்; கையில் பிடித்தபடியே தாக்குதல் நடத்தக்கூடிய கதை, கத்தி—ஆகியவை அறுவகைப் படைகள் என்பது போர்க்கலை அறிஞர் துணிபு.

3. பாரேராய் என்று மூலச்சுவடியில் தவறாக எழுதப்பட்டிருக்கிறது என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத்து. பாலேராய் என்றுதான் இருக்கவேண்டும்.

சிருங்காரபுரத்தில் வசிப்பவர்களான, சண்டையில் விருப்பமுள்ள பாலேராய் முதலான கள்வர்களைக் கைது செய்து "குணவந்தகட்" நோக்கி விரைவாகச் சென்றார்.[1]

तद्दुर्गमात्मसात्कृत्वा विद्राव्य गिरिवासिनः ।
तत्र स्वीयान्प्रतिष्ठाप्य दुर्गं सुन्दरनामकम् ॥ २८ ॥

वशीचक्रे तथा दन्तपाटणस्थं धरापतिम् ।
वसन्तदुर्गमगमत्पदातिबलसंवृतः ॥ २९ ॥

அந்தக் கோட்டையைத் தன் வசப்படுத்திக்கொண்டு, மலைவாழ் மக்களைத் துரத்திவிட்டு, அங்கு தன் ஆட்களை ஸ்தாபித்துவிட்டு (குடியிருக்கச் செய்துவிட்டு, சுந்தர்கட் என்னும் கோட்டையை வசப்படுத்தி, தந்தபாடணத்தின் தலைவனை வென்று, காலாட்படை சூழ வஸந்ததுர்கம் என்னும் கோட்டையை அடைந்தார்.[2]

निजामविजयार्थं यान् सन्तघोरफडादिकान् ।
प्रथमं प्राहिणोत्तैर्हि निजामः परिलुण्ठितः ॥ ३० ॥

गजाश्वादिधनं तस्य वह्वानीतं तदा रणात् ।
भूधरोपत्यकायां तु जीवगात्रावशेषितः ॥ ३१ ॥

गतश्रीः शास्त्रभिन्नाङ्गः करवीरं ययौ खलः ।

---

1. மஹிமத்கட் — இந்த ஊர், கோலாப்பூருக்குத் தென்மேற்கே சுமார் ஐம்பது மைல் தொலைவில், அதாவது விசால்கட்டுக்கு வடக்கே சுமார் பதினைந்து மைல் தொலைவில் இருக்கிறது.

சங்கமேசபுரம்— ரத்னகிரி மாவட்டத்தில், ரத்தினகிரிக்கு வடமேற்கே இருபத்தைந்து மைல் தொலைவில் உள்ளது.

சிருங்காரபுரம்— இதுவும் ரத்தினகிரி மாவட்டத்தில், சங்கமேசபுரத்திற்குக் கிழக்கே பதினைந்து மைல் தொலைவில் உள்ளது.

குணவந்தகட்— சதாரா மாவட்டம், சிருங்காரபுரத்திற்கு வடமேற்கே பதினாறாவது மைலில் இருக்கிறது.

2. சுந்தர்கட் — சதாரா மாவட்டம், பாடண் நகருக்கு மேற்கே மூன்று மைலில் இருக்கிறது.

தந்தபாடண் — சதாரா மாவட்டம், பாடண் நகருக்குத் தெற்கே இருபத்தைந்து மைலில் இருக்கிறது.

வஸந்ததுர்கம்— சதாரா மாவட்டம், கராட் நகருக்குத் தென்மேற்கே எட்டு மைலில் இருக்கிறது.

நிஜாமை வெற்றி கொள்வதற்காக முதலில் அனுப்பப்பட்ட ஸந்த் கோர்படே முதலியவர்களால் நிஜாம் சூறையாடப்பட்டான். போர்க்களத்திலிருந்து அவனுடைய யானை, குதிரை முதலியனவும், பிற பொருட்களும் நிறைய கொண்டுவரப்பட்டன. நிஜாம் மலையடிவாரத்தில் உயிருடன் மட்டும் விடுவிக்கப்பட்டார். செல்வம் இழந்து, ஆயுதங்களால் அங்கம் துளைக்கப்பட்ட அந்தக் கலகக்காரன் கரவீரம் (என்னும் பட்டணத்துக்கு) ஏகினான்.

ततो घोरफडाद्यास्ते समीयुः सचिवान्तिकम् ॥ ३२ ॥

பின்னர், கோர்படே முதலியவர்கள் அமைச்சரை அணுகிச் சென்றார்கள்.

ते तदा सत्कृतास्तेन म्लेच्छयुद्धे मनो दधुः ।
आगतं सचिवं श्रुत्वा शिवराजप्रवर्धिताः ॥ ३३ ॥

नायकाः पत्तिसङ्घानां समागच्छन् प्रहर्षिताः ।
गृहीतदुर्गाः केचिच्च केचित् दुर्गजिघृक्षवः ॥ ३४ ॥

அமைச்சரால் பாராட்டப்பெற்ற அவர்கள், மிலேச்சனுடன் போர் புரிவதில் மனத்தைச் செலுத்தினார்கள். சிவராஜனால் (வீரசிவாஜியால்) வளர்க்கப்பட்டு முன்னேற்றமடைந்த காலாட்படைத் தலைவர்கள் மந்திரி வந்துள்ள செய்தியறிந்து மகிழ்ச்சியுற்றவர்களாய் ஒன்றுகூடி வந்தனர். அவர்களுள் சிலர் கோட்டைகளைப் பிடித்தவர்கள், மற்றும் சிலர் கோட்டைகளைப் பிடிக்க விரும்புகிறவர்கள்.

केचिद्युयुत्सवो म्लेच्छैरश्वसेनायुताः परे ।
संमार्जितुं निजागांसि नृपसेवाविधित्सया ॥ ३५ ॥

पादयोः पतिता राजसचिवस्य महात्मनः ।

குதிரைப் படையோடு இருந்த சிலர், மிலேச்சர்களுடன் போர்புரிய பெருவிருப்பம் கொண்டு, மன்னன்கீழ் பணிபுரிய விரும்பி, தம் குற்றங்களைத் துடைத்துவிடுவதற்குப்போல, அரசாளும் அமைச்சரின் கால்களில் பணிந்தனர்.

ततस्तानुक्तिसत्कारैः सत्कृत्याशु प्रहर्षयन् ॥ ३६ ॥
स प्रदायाभयं तेषां तत्तत्कार्येष्वयोजयत् ॥ ३७ ॥

அவர்களை உரிய மரியாதைகளால் கௌரவித்து, (அதனால்) மகிழ்ச்சியுறச் செய்து, அவர்களுக்கு அபயம் அளித்து, அவரவர்களுக்கான வேலைகளில் நியமித்தார்.

अथ नृपसचिवः प्रहर्षितः स्वं
बलमतुलं समरोत्सुकं विलोक्य ।
यवनजलधिशोषकुम्भयोनि-
र्मतिमदधाद्विजयाय सिह्मनाम्नः ॥ ३८ ॥

பிறகு, ஆட்சிபுரியும் அந்த அமைச்சர் தன்னுடைய சேனாபலம் யுத்த ஆர்வமுள்ளதாக இருப்பது கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தார். யவனக் கடலை வற்றவைக்கும் அகஸ்திய முனிவர் போன்ற அவர், சிம்மம் என்று பெயர் கொண்ட (கோட்டையை) வெற்றி கொள்வதில் மனத்தைச் செலுத்தினார்.

॥ इति श्रीराजारामचरिते काव्ये द्वितीयः सर्गः ॥

ஸ்ரீ ராஜாராம சரிதம் என்னும் காவியத்தில் இரண்டாவது ஸர்கம் முற்றிற்று.

## ॥ तृतीयः सर्गः ॥

## மூன்றாவது ஸர்கம்

अथ श्रीरामराजस्य भाविवृत्तं पुरन्दरः ।
श्रुत्वा प्रोवाच सदसि त्रिकालज्ञं मुनीश्वरम् ॥ १ ॥

அடுத்து, ஸ்ரீ ராஜாராமனின் எதிர்கால வரலாற்றைக் கேட்ட இந்திரன், முக்காலமும் உணர்ந்த முனிவரை (நாரதரை) நோக்கி, அவையில் பின்வருமாறு கூறினான்.

महर्षे रामराजासौ वीरव्रतमशिक्षितः ।
सुकुमारोऽनभिज्ञश्च क्लेशानां मार्गगामिनाम् ॥ २ ॥

आमनोर्नृपवंशस्य करीरः प्रियदर्शनः ।
राजलक्षणसम्पन्नः प्रियवक्ता प्रियङ्करः ॥ ३ ॥

"பெருமுனிவரே! இராஜாராமன் வீரவிரதம் கற்பிக்கப்படாதவன்; அழகன்; (பயணத்தின்போது) வழியில் எதிர்ப்படக்கூடிய துன்பங்களை(ப்பற்றி) அறியாதவன்; பக்குவம் வராத அரசகுலத் தோன்றல்; காட்சிக்கினியவன்; அரச லட்சணங்கள் பொருந்தியவன்; இனிமையாகப் பேசுகிறவன்; இனியதைச் செய்பவன்.

जनानां प्राणरूपोऽसौ तेजस्वी भाविविक्रमः ।
सीतया प्राणसमया पट्टराज्ञ्या समन्वितः ॥ ४ ॥

"குடிமக்களின் உயிர்வடிவானவன்; ஒளிபொருந்தியவன்; ஆற்றல் மிக்கவன்; உயிருக்கிணையான பட்டத்தரசியான ஸீதையோடு கூடியவன்.

महाराजेन पित्रास्य वातुकेन महीभृताम् ।
श्रीशिवछत्रपतिना सिंहासननिषेदुषा ॥ ५ ॥

संभाजीकेन च भ्रात्रा ज्वलज्ज्वलनतेजसा ।
विलुण्ठितेषु सर्वेषु पौरजानपदेषु च ॥ ६ ॥

दस्युभिः कण्टकाकारैः समाक्रान्तासु वीथिषु ।
मेघवर्षेण नितरामुत्तटासु सरित्सु च ॥ ७ ॥

कथं कर्णाटकं प्रागात् कथ्यतां तन्महामुने ।

"சிம்மாஸனத்தைப் பிடிக்கும் பேராசை கொண்ட அரசர்களைக் கொன்றொழித்த இவருடைய தந்தையார் ஸ்ரீ சிவாஜி சத்ரபதியும், மிக்க ஒளியும், ஆற்றலும் படைத்த ஸம்பாஜீ என்ற சகோதரரும் இல்லாத நேரத்தில் எல்லா நகரங்களும், கிராமங்களும் சூறையாடப்பட்டு, முள்போன்ற தஸ்யுக்களால் (அந்நிய நாட்டு கூலிப்படையினராலும், தாய்நாட்டுப் பற்றற்ற கீழ் மக்களாலும்) நெடுஞ்சாலைகள் ஆக்ரமிக்கப்பட்டிருக்கும்போது, மழைப் பொழிவினால் ஆறுகளில் தண்ணீர் நிரம்பி வழிந்துகொண்டிருக்கும் நிலையில் எவ்வாறு கர்நாடகம் சென்றடைந்தான்? மாமுனிவரே! அது சொல்லப் படட்டும். (அதைச் சொல்வீர்களாக).

देवर्षिः प्राह देवेन्द्रं महेन्द्र श्रृणु भूपते ॥ ८ ॥

राजारामस्य विजयगतिं कर्णाटकं प्रति ।

தேவ ரிஷியான நாரதர், தேவேந்திரனைப் பார்த்துக் கூறினார்: "மஹேந்திரா! கர்நாடகத்தை நோக்கி, மன்னன் இராஜாராமனுடைய வெற்றிப் பயணத்தைக் கேள்:

प्रधानपुरुषैः सार्धं मन्त्रयित्वा महीपतिः ॥ ९ ॥

पाराशरे दुर्गवरे दुर्गादेवीं वरप्रदाम् ।
प्रतिपद्दिनमारभ्य नवरात्रे विशेषतः ॥ १० ॥

पूजयित्वान्वहं देवीं तत्पदन्यस्तमानसः ।
त्रिकालपूजनैर्धूपैर्दीपैर्नीराजनादिभिः ॥ ११ ॥

नानोपहारैश्च तथा जपैर्ब्राह्मणभोजनैः ।
नटनर्तकगीतैश्च बह्वीनां वारयोषिताम् ॥ १२ ॥

सुन्दरीणां प्रमत्तानां यौवनेन मदेन च ।
नृत्तैर्बहुविधैश्चापि गीतैरपि दिवानिशम् ॥ १३ ॥

"முக்கியமான நபர்களுடன் மன்னர் கலந்தாலோசித்து, *பாராசரகட்டிலுள்ள வரமளிக்கும் துர்காதேவியை, சுக்ல பிரதமை முதற்கொண்டு தொடங்கும் சிறந்த நவராத்திரியில், அவள் திருப்பாதங்களில் மனம் ஒன்றியவனாக, மூன்று கால பூஜை, தூபம், ஆரத்தி, முதலியவற்றால் நாள்தோறும் தேவியை வழிபட்டு, பலவகையான நிவேதனங்களாலும், ஜபங்களாலும்,

---

* பாராசரகட் என்பது பனாலாகோட்டையின் மற்றொரு பெயர் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.

வேதவிற்பன்னர்களுக்கு விருந்து படைத்தும், இராப்பகலாக அநேக கணிகையரின் நடனம், நர்த்தனம், இசையாலும், இளமையாலும், பருவச்செழிப்பாலும் கர்வமுற்ற அழகியரின் பல்வகை நிருத்தியங்களாலும் பண்ணிசையாலும்,

तथा डमरुहस्तानां चण्डमुण्डविदारिणाम् ।
तुलजाभक्तिसक्तानां ताण्डवैश्च विशेषतः ।। १४ ।।

"விசேஷமாக, கையில் டமரு வைத்துக்கொண்டு, (துர்கையால் அழிக்கப்பட்ட) சண்டமுண்டர்களைப்போல் வேஷம் போட்டுக்கொண்ட துலஜாதேவியின் பக்தர்களுடைய தாண்டவங்களாலும்,

मेषछागसहस्राणां मण्डलोपरि धावताम् ।
स्वखड्गच्छिन्नवीराणां [शिरसां] सद्यः स्वर्गमुपेयुषाम् ।। १५ ।।

बलिदानैरसंख्यातैः कुमारीपूजनैस्तथा ।
सुवासिनीनां साध्वीनां पूजनैर्भोजनैस्तथा ।। २६ ।।

"(பலி கொடுப்பதற்கென குறிக்கப்பட்டிருந்த) மண்டலத்தில் ஓடுகின்ற, தலை தம் வாளால் துண்டிக்கப்பட்டவுடனே (தெய்வத்துக்கு அர்ப்பணிக்கப் பட்டதன் காரணமாக) ஸ்வர்க்கத்துக்குச் செல்பவைகளுமான, ஓலமிடுகின்ற ஆயிரக்கணக்கான ஆண் — பெண் ஆடுகளைப் பலி கொடுத்தும், குமாரீ — ஸுவாஸிநீ — உத்தம ஸ்த்ரீகளைப் பூஜித்தும், விருந்தளித்தும்,

वन्दिनां स्तुतिपाठैश्च नानादेशनिवासिनाम् ।
प्रेक्षणीयैर्बहुविधैर्भवानीं प्रीणयन्नृपः ।। १७ ।।

"பல நாடுகளையும் சேர்ந்த இசைவாணர்களின் தோத்திரப் பாடல்களாலும், பாணர்களின் பாராட்டுப் பண்களாலும், பலவகைப்பட்ட கவின் காட்சிகளாலும் (அன்னை) பவானியை அரசன் மகிழ்ச்சியுறச் செய்தான்.

अथ स्वप्ने भवानी तं राजानं भक्तवत्सला ।
उवाच पुत्र मा भैषीर्बिल्वशाखार्चनं कुरु ।। २८ ।।

"அடியார்களிடம் அன்புடைய பவானிதேவி, மன்னனிடம் கனவில் கூறினாள்: மைந்த! பயப்படாதே. வில்வமரக் கிளைக்கு அர்ச்சனை செய்.

सर्वे विघ्ना विनश्यन्ति सफलस्ते मनोरथः ।
भविष्यति न सन्देहो रामः खलु भवान् हरिः ।। १९ ।।

"எல்லா இடையூறுகளும் அழியப்போகின்றன; உன்னுடைய மனோரதம் நிறைவேறப்போகிறது; ஐயமில்லை. நீ, மகாவிஷ்ணுவின் அவதாரமான (அந்த) ராமனேதான்,

यथाहं दाशरथिना सुस्थितेन कुशासने ।
दशाननवधार्थाय प्रार्थिता वरदायिनी ॥ २० ॥

वरं दत्तवती तुभ्यं तत्प्रसादेन रावणः ।
त्वया हतो महावाहो सपुत्रबलवाहनः ॥ २१ ॥

तदिदानीं महाराज राजीवसमलोचन ।
मया सुगुप्तः सततं यत्रकुत्रापि गच्छ भोः ॥ २२ ॥

"முன்பு, தசரதனுக்குக் குமாரனாக அவதரித்து, (விரத நியமமான) குசாஸனத்தில் அமர்ந்து இராவண வதத்தைக் கோரி பிரார்த்தனை செய்த போது, வரம் கொடுப்பவளாகிய நான், உனக்கு வரம் கொடுத்தேன்; அதன் பலத்தினால், மைந்தர்களோடும், படைகளோடும், வாகனங்களுடனும் இராவணன் உன்னால் எவ்வாறு கொல்லப்பட்டானோ,* அதேபோல், பெருந்தோளாய்! இப்போது, தாமரை நிகர் கண்ணனே! பேரரசனே! என்னால் பாதுகாக்கப்பட்ட நீ எங்கு வேண்டுமானாலும் செல், ஐயனே!

दुर्बुद्धयो न शक्ष्यन्ति द्रष्टुं त्वां किमु धर्षितुम् ।
एवं भवानी तं भूपं सन्त्वयित्वा महानिशि ॥ २३ ॥

पुरतस्तस्य नृपतेरन्तर्धिमगमद् द्रुतम् ।

"கெடுமதியாளர்கள் உன்னைப் பார்க்கவே முடியாது என்னும்போது பயமுறுத்த இயலாது என்பதைச் சொல்லவா வேண்டும்?" — இப்படி, நடுஇரவில், இவ்வரசனுக்கு ஆறுதல் கூறிவிட்டு, அவன் எதிரிலேயே, உடனே மறைந்தாள்.

---

* இந்தக் கதை ஸ்ரீ தேவீ பாகவத புராணத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. இராமன், ஸீதையைப் பிரிந்து தவித்தபோது, அவனைக் காண வந்த நாரதர்,

व्रतं कुरुष्व श्रद्धावान् आश्विने मासि सांप्रतम् ।
नवरात्रोपवासं च भगवत्याः प्रपूजनम् ॥

அவ்விதமே இராமன் முறைப்படி அம்பிகையை வழிபட்டதும், அன்னை வரம் தந்தாள்.

राम राम महाबाहो तुष्टास्म्यद्य व्रतेन ते । ... ...
हत्वाऽथ रावणं चापि कुरु राज्यं यथासुखम् ॥

(தேவீ பாகவதம்)

ततः प्रभाते नृपतिर्द्विजाग्र्येभ्यः शशंस तत् ॥ २४ ॥

பொழுது விடிந்ததும், அந்தணப் பெரியோரிடம் அரசன் அச்செய்தியைக் கூறினான்.

द्विजा भूपमिति प्रोचुर्यथार्थं देवभाषितम् ।

அந்தணர்களும், தெய்வத்தின் கூற்று உண்மையாகும் என்று கூறினர்.

ततो नृपः समादिश्य बिल्वशाखाविधौ द्विजान् ॥ २५ ॥

श्रीविद्वत्केशवमुखान् साचार्यान्सपुरोहितान् ।

कृतं तैर्विधिवत्तत्र बिल्वशाखाप्रबोधनम् ॥ २६ ॥

அரசன், வில்வமரக்கிளை வழிபாட்டுக்காக, ஸ்ரீ கேசவர் முதலிய வித்துவான்களையும், ஆசாரியர்களையும், புரோகிதர்களையும் அழைத்தான். அவர்களால், முறைப்படி, 'பில்வசாகா ப்ரபோதனம்' என்ற கர்மா நிகழ்த்தப் பட்டது.

भगवत्याः सुराधीश तेनाजय्यो नृपोऽभवत् ।

ततो नवम्यां भूपालः सुस्नातः कृतमङ्गलः ॥ २७ ॥

जापकैर्ब्राह्मणैः सार्धं होमारम्भचीकरत् ।

"தேவர்கோனே! அதனால் (பகவதியின் அருளாசியுடன் மொழியப் பட்ட பில்வ வழிபாடு என்ற கர்மாவினால்) மன்னன் (பகைவர்களால்) வெற்றி கொள்ள முடியாதவனாக ஆனான். தொடர்ந்து, நவமியன்று, மன்னன் நீராடி மங்கல விதிகள் நிறைவேற்றி, மந்திர ஜபம் செய்யும் வேதியர்களைக் கொண்டு ஹோமத்தைத் துவக்கினார்.[1]

पूजयित्वा गणपतिं कृत्वा पुण्याहवाचनम् ॥ २८ ॥

होममारेभिरे विप्राः कृतकौतुककङ्कणाः ।

புண்யாஹவாசனம்[2] செய்து, கணபதியை வழிபட்டு, (இடையூறு இல்லாமல் நினைத்த காரியம் நிறைவேறுவதற்காகவேண்டி) மங்கலச்சரடு கையில் கட்டுக்கொண்ட வேதியர்கள் வேள்வியைத் துவக்கினார்கள்.

---

1. ஹோமத்தின் பெயர் இங்கு குறிப்பிடப்படவில்லை. என்றாலும், நவராத்திரி நவமியில், துர்கா தேவியைக் குறித்துச் செய்யப்பட்ட ஹோமம் என்பதால், ஸ்ரீ நவ சண்டீ ஹோமம் என்று கொள்வது சரியானதாகும்.

2. கலச நீரில், நீர்க்கடவுளான வருணனை ஆவாஹனம் செய்து, உரிய மந்திரங்களைக் கூறி வழிபட்டு, பின்னர், அந்தப் புனித நீரை வேள்விச் சாலையில் தெளித்துத் தூய்மைப்படுத்தும் சடங்கு.

होमावसाने नृपतिर्ब्राह्मणैः सह मन्त्रवित् ॥ २९ ॥

जयप्रदानि नृपतेश्चिन्हानि समुदैक्षत ।

வேள்வியின் நிறைவுக் காலத்தில், மந்திரம் அறிந்த மன்னரும், அந்தணர்களும், மன்னனுக்கு வெற்றியை அறிவிக்கும் சங்கேதங்களைக் கண்டார்கள்.

विधूम्रो विष्फुलिङ्गश्च रथमेघसमस्वनः ॥ ३० ॥

प्रदक्षिणशिखो दीप्तः स्वर्णवर्णः शुभाकृतिः ।
प्रहुतेषु च हव्येषु यदा त्वीदृग्घुताशनः ॥ ३१ ॥

मण्डलाधिपते राज्ञस्तदा विद्यान्महाजयम् ।
इति द्विजेभ्यः श्रुत्वाऽसौ नृपः प्रमुदितोऽभवत् ॥ ३२ ॥

வேள்விப் பொருட்களை அக்னியில் அவியாகச் சொரியும் பொழுது அக்னி புகையில்லாமலும், கணகணவென்று ஜ்வாலையுடையதாயும், (போர்க் களத்தில்) தேர் ஓடும் பொழுதும், மேகம் முழங்கும் பொழுதும் ஏற்படும் ஒலிகள் போன்ற ஒலியுள்ளதாயும் வலமாகக் கொழுந்துவிட்டுச் சுழலும் தீச்சுவாலையுடையதும், பொன்போன்ற நிறமும், மங்களமான தோற்றமும் உடையதாக இருக்குமானால் பூமண்டல நாயகனான அரசனுக்கு வெற்றி நிச்சயம் என அறிதல் வேண்டும்" என்று அந்தணர்கள் கூறக்கேட்ட மன்னன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

ततः पूर्णाहुतिंदत्वा वह्नौ प्रज्वलिते शुभे ।
गजहस्तप्रतीकाशां वसोर्धारामपातयत् ॥ ३३ ॥

பிறகு வேள்வித் தீயானது நன்கு சுவாலை வீசிக்கொண்டிருக்கும் சமயம் பூர்ணாஹுதி செய்து, யானையின் துதிக்கை போன்ற (ஹோமக் கரண்டியின் மூலம்) "வஸோர்தாரா" நிறைவேற்றப்பட்டது.*

---

* வேள்வி முற்றுப்பெறும் வேளையில், 'சமகம்' என்ற யஜுர் வேத மந்திரங்களைக் கூறியபடி, தடையின்றி, தொடர் இழையாக நெய்யினை அவியாகச் சொரிதல், "வஸோர்தாரா" எனப்படும். இதனால் எல்லாச் செல்வங்களும் பெறப்படும் என்பது ரிஷிகளின் வாக்கு. இந்த ஹோமத்துக்கான மரக்கரண்டி, நீண்டும் பருத்தும், அக்னியின் பக்கமுள்ள நுனியில் யானை முகம் போன்ற தோற்றமும் செதுக்கப்பட்டதாகவும் இருந்திருக்கவேண்டும்.

ब्राह्मणैः पठ्यमानेषु मन्त्रेषु स्वरपूर्वकम् ।
वदत्सु बन्दिमुख्येषु नृपस्य बिरुदावलीः ॥ ३४ ॥
*नृत्यत्सु वारमुख्यासु हरितो बधिराभवन् ।

மந்திரங்களை ஸ்வரத்தோடு வேதியர்கள் கூற, துதி பாடகர்கள் அரசனுடைய பட்டங்களை எடுத்திசைக்க, ஆரணங்குகள் நடனமாட—இப்படிப் பல்வகை இறைச்சலினால் திசைகள் செவிடாகிப் போயின.

एवं समाप्य होमं तु द्विजान्संपूज्य भक्तितः ॥ ३५ ॥
दक्षिणां प्रददौ तेभ्यो यथायोग्यं स्वशक्तितः ।

இவ்வாறு ஹோமத்தைப் பூர்த்த செய்து, பக்தியோடு அந்தணர்களைக் கௌரவித்து, அவர்களின் தகுதிக்கும், தனது சக்திக்கும் ஏற்றபடி தட்சிணை அளித்தான்.

ततः पुनर्महादेवीं महादेवमनःप्रियाम् ॥ ३६ ॥
पूजयित्वा पुनः स्तुत्वा प्रणिपत्य पुनः पुनः ।
क्षमाप्य लोकजननीं भक्ताऽभयविधायिनीम् ॥ ३७ ॥
पारणां विधिवच्चक्रे तुष्टपुष्टजनैर्वृतः ।

மகாதேவரின் மனத்துக்குகந்தவளான மகாதேவியை மீண்டும் வழிபட்டு, மீண்டும் போற்றி, மீண்டும் மீண்டும் வணங்கி, அடியார்களுக்கு அபயம் அளிக்கும் விரதமுடைய உலகநாயகியிடம் பிழைகளுக்கு மன்னிப்புக் கோரி, மகிழ்ந்திருந்த மக்களோடுகூட, உணவு அருந்தினான். நவராத்திரி முழுவதும் உணவு அருந்தாமலிருந்ததால் விழா பூர்த்தியானதும் உணவு அருந்தி விரதத்தை நிறைவு செய்தான்.

नटनर्तकसङ्घेभ्यः कुलेभ्यो वारयोषिताम् ॥ ३८ ॥
सर्वेषां स्तुतिकर्तॄणां कवीनां च विशेषतः ।
प्रीत्या वित्तं बहु प्रादात् वस्त्राण्याभरणानि च ॥ ३९ ॥

ஆடல்பாடல் குழுவினருக்கும், கணிகையர்களுக்கும், துதிபாடகர்கள் அனைவருக்கும் குறிப்பாகக் கவிஞர்களுக்கும் மிகுந்த செல்வத்தையும், ஆடையாபரணங்களையும் மகிழ்ச்சியுடன் அளித்தான்.

---

* இந்த नृत्यत्सु वारमुख्यासु என்ற சொற்றொடர் முழுவதும் பிழை பொருந்தியது.

एवं भवान्या नवरात्रयोग्यं
महोत्सवं लोकमनोऽभिरामम् ।
सम्पाद्य राजा मनसा तुतोष
निराधिना भूपतिचक्रवर्ती ॥ ४० ॥

மன்னர்மன்னனாகிய ராஜாராமன் இவ்விதமாக மக்களுடைய மனதைக் கவரும் வகையில் நவ்ராத்திரி காலத்திற்கு ஏற்றவாறு பவானியின் திருவிழாவை நிறைவேற்றி கவலையற்ற மனதுடன் விளங்கினான். அவ்வரசன் உளம் மகிழ்ந்தான்.

॥ इति श्रीमहाराजाधिराजमहाराजछत्रपतिराजारामचरिते केशवपण्डितकृतौ [विरचिते]
"नवरात्रमहोत्सवो" नाम तृतीयः सर्गः ॥

கேசவபண்டிதால் இயற்றப்பட்ட ஸ்ரீ மஹாராஜாதிராஜ மஹாராஜ சத்ரபதி ராஜாராம சரிதத்தில் "நவராத்ர மஹோத்ஸவம்" என்ற மூன்றாவது ஸர்கம் முற்றிற்று.

## ।: चतुर्थः सर्गः ।।

### நான்காவது ஸர்கம்

ततः प्रभाते नृपतिः सम्पाद्यावश्यकं विधिम् ।
सम्पूज्य देवान्विप्रांश्च बुभुजेऽन्नं चतुर्विधम्[1] ।। १ ।।

(மறுநாள்) பொழுது விடிந்ததும், அவசியமான எல்லாக் கடன்களையும் மன்னன் நிறைவேற்றிய பின்னர், தெய்வங்களையும், வேதியர்களையும் வழிபட்டு நால்வகை உணவுகளை அருந்தினான்.

मन्त्रिभिस्तुरगारूढैः गजारूढः स्वयं ततः ।
मुख्येन सेनापतिना तथान्यैः सैन्यनायकैः ।। २ ।।

पत्तिभिः पत्तिदलपैः गजस्थैर्हयसादिभिः ।
ब्राह्मणैः क्षत्रियैर्वैश्यैः शूद्रैरन्यैः समन्वितः ।। ३ ।।

विभूषितैः सुवस्त्राद्यैर्जयमङ्गलवादिभिः ।
तुरगान् शिक्षितांस्तद्ज्ञैः शुभावर्तान् महाजवान् ।। ४ ।।

शुभपल्याणसंयुक्तानुन्नतान्भूषितांस्तथा ।
महागजान् भद्रमन्द्रमृगजातिकुलोद्भवान् ।। ५ ।।

कुथाढ्यान् शिक्षितांस्तद्ज्ञैर्लोलघण्टानलङ्कृतान् ।
पुरस्कृत्यागमद्राजा मुहूर्ते विजयाभिधे ।। ६ ।।

நல்லாடை அணிந்து, மன்னர் தாம் (மட்டும்) யானைமீது வீற்றிருந்து, குதிரைகளில் அமர்ந்த அமைச்சர்களாலும், முக்கியமான சேனாபதியாலும், பிற படைத்தலைவர்களாலும் (கூலிப்படையின் தலைவர்களாலும் என்று வைத்துக்கொள்ளலாம்), காலாட்படையாலும், காலாட்படைத் தலைவர்கள், யானைமீது அமர்ந்தோர், குதிரைமீது அமர்ந்தோர், வேதியர் – க்ஷத்ரியர் – வணிகர் – வேளாளர்கள், மங்கல முழக்கமிடுவோர் முதலானோரால் சூழப் பட்டு, குதிரைகளைப் பழக்குவதில் வல்லுநர்களால் பயிற்றுவிக்கப்பட்டதும், மங்கலச் சுழிகள் கொண்டதும், ஜேணம் அமைக்கப்பட்டதும், கடும்வேகமுடன் செல்லக்கூடியதும், உத்தம ஜாதியில் தோன்றியதுமான அலங்கரிக்கப்பட்ட குதிரைகளையும் [2]பத்ரா – மந்த்ர – ம்ருக இனத்தில் தோன்றியதும், மேலே

---

1 भक्ष्यं भोज्यं पेयं, खाद्यं चेति चतुर्विधमन्नम् ।। முறுக்கு போன்ற கடைவாய்ப்பற்களால் கடித்துண்பதும், சாதம், பாயஸம் போன்றவை, பழம் போன்றவை நால்வகையுணவு.

2 भद्रामन्द्रा-मृगाश्चेति विज्ञेयास्त्रिविधा गजाः । भद्रमृग, मन्द्रमृगेति च भेदविशेषः ।।

அமைக்கப்பட்ட மெத்தையுடன் கூடியதும், யானைப் பயிற்சிக்கலை அறிஞர்களால் பயிற்றுவிக்கப்பட்டவைகளும். அசைந்தாடும் மணிகளுடன் விளங்குபவைகளுமான யானைகளையும் முன்வைத்து "விஜய" என்னும் முஹூர்த்தத்தில்[1] அரசன் வெளியே பவனியாகப் புறப்பட்டான்.

अपराजितदिग्भागे[2] शम्यश्मन्तकभूरुहौ[3] ।
सम्पूज्य विधिवत्तत्र महोत्साहो महाद्युतिः ॥ ७ ॥
संस्तूयमानः कविभिर्जगाम निजमन्दिरम् ।

மன்னன் முதலில் வடக்குத் திசையில் சென்று, வன்னி மரம், முஞ்சி போன்ற புல் இவற்றை முறைப்படி பூஜித்து, மகிழ்ச்சியால் (அழகு) ஒளிமிக்கவனாயும், உற்சாகம் மிகுந்தவனாயும், புலவர்களால் பாராட்டப்பட்டவனாயும் தன் இருப்பிடத்தை அடைந்தான்.

तत्र नीराजितो दारैरुदारैः प्रेमवर्धनैः ॥ ८ ॥
अतिचक्राम रजनीं सान्त्वयन्वामलोचनाः ।

அங்கு அன்புமிக்கவர்களும், விசால மனம் படைத்தவர்களுமான, மனைவியால் ஆரதியுடன் வரவேற்கப்பட்டான்; அங்கு கண்ணழகிகளை மகிழ்வுறச் செய்து இரவைப் போக்கினான்.

अथो ये कलिकन्देन पाराशरगिरिग्रहे ॥ ९ ॥
नियुक्ताः म्लेच्छनाथास्ते परिवव्रुर्गिरिं तदा ।
आवृतं म्लेच्छसैन्येन गिरिमालोक्य भूपतिः ॥ १० ॥

கலிபுருஷனால் (அந்நிய நாட்டுப் படையெடுப்பாளர்களால்) ஏவப்பட்ட மிலேச்சத் தலைவர்கள் பாராசரகிரிக் கோட்டை (பனாலாகட்) அமைந்துள்ள மலையைச் சூழ்ந்து கொண்டார்கள். மலையானது மிலேச்சப்படையினால் சூழப்பட்டிருப்பதை அரசன் அறிந்து,

---

1. 1689ம் ஆண்டு செப்டம்பர் 14ம் தேதி சனிக்கிழமை.

2. ஈசான்ய திக்கு—வடகிழக்கு—என்பதற்கு अपराजित என்ற சொல்லை, இடம்—காலத்துக்கு ஏற்பக் கையாண்டிருப்பது எண்ணி மகிழத்தக்கது. அரசன், போருக்குத் தயாராகிக் கொண்டிருக்கிறான்; நவராத்திரி முடிந்து விஜய யாத்திரை என்ற நிகழ்ச்சி நடைபெறும் வேளையில் அபராஜித—வெல்லமுடியாத—என்ற சொற்பிரயோகம் சுவை கூட்டுகிறது.

3. अश्मन्तक Name of a tree or name of a plant from the fibres of which a Brahmana's girdle may be made.

तुच्छीकृत्य तु तान्सर्वान्महाम्लेच्छविनाशकः ।
नारायणसुते श्रीमच्छङ्करे लोकशङ्करे ॥ ११ ॥

राज्यैकदेशं निदधे क्वारिदुर्गसमाश्रयम् ।
रामचन्द्रे तु सकलं राज्यं विन्यस्य गूढधीः ॥ १२ ॥

அவர்கள் எல்லோரையும் அற்பமாக மதித்து. மிலேச்சர்களுக்குப் பெரும் யமனாகவும் இருந்துகொண்டு, குடிமக்களுக்கு நன்மை செய்பவரும், நாராயணரின் மைந்தருமான ஸ்ரீமத் சங்கரரிடம் ராஜ்யத்தின் ஒரு பகுதியான கோரிகட்* கோட்டைப் பிரதேசத்தை ஒப்புவித்துவிட்டு, பிறரால் அறிய முடியாத கருத்தாழம்மிக்க அரசன், அரசு முழுவதையும் ராமச்சந்திரரிடத்தில் ஒப்படைத்து,

तस्य हस्ते धनाजीकं सन्ताजीकं च शङ्करम् ।
अश्वसेनाधिपान् सर्वान् तथा पत्तिगणाधिपान् ॥ १३ ॥

दत्वा समाहितमना गमनाय मतिं दधौ ।

அவரிடம், தனாஜீ – ஸந்தாஜீ – சங்கர்ஜீ முதலியவர்களையும், குதிரைப் படைத் தலைவர்களையும். எல்லாக் காலாட்படைத் தலைவர்களையும் வழங்கி, மனம் அமைதியுற்றவனாய், (கர்நாடகத்தை நோக்கிப்) புறப்படுவதில் மனத்தைச் செலுத்தினான்.

द्विजाग्र्येभ्यस्तदा दत्वा दानानि विविधानि च ॥ १४ ॥

द्विजैः कृतस्वस्त्ययनः केशवाद्यैर्विशेषतः ।
अथ पान्थोचितं वेषं विधाय नृपसत्तमः ॥ १५ ॥

मङ्गलानि समालभ्य कृत्वा गां च प्रदक्षिणम् ।
प्रतस्थे नृपशार्दूलः साकेतपतिवद्वनम् ॥ १६ ॥

அதுசமயம், தலைசிறந்த அந்தணர்களுக்குப் பலவகையான் தானங்களை அளித்து, கேசவர் முதலிய அந்தணர்களால் ஸ்வஸ்த்யயனம் என்னும் (பாதுகாப்பு அளிக்கும் மங்களமான) வேத மந்திரங்களால் ஆசிர்வதிக்கப் பட்டும், வழிப்போக்கர்களுக்கு உகந்த உடை அணிந்தும், நற்சகுனங்கள் பெற்றும், பசுவை வலம் வந்தும், அயோத்யாபதியான ராமசந்திரமூர்த்தி (தந்தையின் சொற்படி) காட்டுக்குப் புறப்பட்டதுபோல, பெருவீரரான அவர் புறப்பட்டார்.

---

* பூனே நகருக்கு மேற்கே சுமார் 65 கி. மீ. தூரத்தில் உள்ளது

अग्रे सेनापतिः पश्चात् मानसिह्मोऽरिमर्दनः ।
सत्यप्रतिज्ञः प्रह्लादः श्रीप्रह्लाद इवापरः ॥ १७ ॥

हरिभक्तः सुमतिमान् नृपसेवाविशारदः ।
तद्धस्तकोऽनन्तसुतः कृष्णशर्मा महामतिः ॥ १८ ॥

तथा प्रधानः सुमतिर्नीलकण्ठश्च सानुजः ।
मोरेश्वरतनूजन्मा संभाव्यमतिविक्रमः ॥ १९ ॥

तत्कराम्भोजसञ्जातः सत्ववानुद्धवाभिधः ।
अन्वगच्छन्महीपालं महीपालहिते रताः ॥ २० ॥

முன்னணியில் படைத்தலைவர், பின்னால் எதிரிகளை அழிக்கவல்ல மானசிம்மன், ஸ்ரீ பிரஹ்லாதனைப் போன்று விஷ்ணு பக்தரும், ஸத்ய பிரதிக்ஞரும் நல்லறிவு உடையவரும், அரசர் பணியில் மூழ்கியவருமான பிரஹ்லாதபந்த்; உறுதுணையும் பெருமதி படைத்தவருமான கிருஷ்ணாஜீ அனந்த்; மோரேஸ்வரபந்தின் குமாரனும், முக்கியமானவரும், நன்மதிபடைத்தவருமான நீலகண்ட பந்த்; அவருடைய சகோதரர் (பஹிரோ பந்த்) அவருடைய குமாரரும் மன்னரின் நலனைக் கோருபவரும் நற்குணமுடையவரும் உத்தவர் என்று பெயர் கொண்டவரும், அம்மன்னரைப் பின்தொடர்ந்து சென்றார்கள்.

कृष्णात्मजो नीलकण्ठः स्वामिसेवाविचक्षणः ।
सदा नृपहिते सक्तः प्रियवक्ता प्रियङ्करः ॥ २१ ॥

खण्डोवल्लालमुख्याश्च कायस्थाश्चित्रगुप्तजाः ।
चन्द्रसेनान्वयाश्चान्ये श्रीदाल्भ्यकृतगोपनाः ॥ २२

वाजीकदमनामाथ खण्डोजीकोदमस्तथा ।
एते चान्ये च तं भूपमनुजग्मुः पुरन्दर ॥ २३ ॥

தலைவர் பணியில் முன்னிற்பவரும், எப்போதும் அரசர் நலனில் ஈடுபட்டவரும், இனிமையாகப் பேசுபவரும், பிரியமானதையே செய்பவருமான கிருஷ்ணருடைய மைந்தரான நீலகண்டர்; கண்டோபல்லாலத் தலைவர்கள்; சித்ரகுப்த காயஸ்தர்கள்; சந்திரசேனர் வழித்தோன்றல்கள்; மற்றும் ஸ்ரீ தால்ப்யரால் பாதுகாப்பு அளிக்கப்பட்டவர்கள்; பாஜீகதம் — கண்டோஜீ கதம் ஆகியோரும் மற்றோரும் இந்திரனே! அம்மன்னனைப் பின்பற்றிச் சென்றார்கள்.

सर्वे तुरङ्गमारूढाः प्रलपन्तः परस्परम् ।
न ज्ञाताः परिविस्थैस्तैर्म्लेच्छैरेते विमोहितैः ॥ २४ ॥

எல்லோரும் குதிரைகளில் ஆரோகணித்து ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டே சென்றபோது மோஹவயப்பட்ட அகிழ்ப்புறமிருந்த மிலேச்சர்களால் அவர்கள் இன்னார் என்பது அறியப்படவில்லை.

हेषन्तो धावमानास्ते तुरङ्गाः पथि सङ्कटे ।
नृपप्रभावाद्गच्छन्तो नैव दृष्टा दुरात्मभिः ॥ २५ ॥

அரசன் பெற்றிருந்த தெய்வத்திருவருட் பயனாக வழியில் இடையூறுகள் ஏற்பட்ட நிலையிலும், கனைத்துக்கொண்டே ஓடிய அக்குதிரைகளை அக்கெடுமதியாளர்கள் பார்க்கவில்லை.

तथैवोन्मार्गगा मार्गे स्रवन्त्यः कलुषोदकाः ।
तीर्णाः श्रीरामराजस्य प्रभावादनुयायिभिः ॥ २६ ॥

முன்னேறிச் சென்று கொண்டிருக்கும்போது வழியில் எதிர்ப்பட்ட கலங்கிய நீர்நிரம்பிய ஆறுகள், ஸ்ரீ ராஜாராமனுடைய பிரபாவத்தினால், அவரைப் பின்தொடர்ந்தவர்களால் கடக்கப்பட்டன.

कृष्णमृत्स्नान्वितक्षेत्रे निदाघे न चलन्ति ये ।
ते तुरङ्गाः पङ्किते मार्गेऽगच्छन्यथाङ्गणे ॥ २७ ॥

கரிசல் பூமியிலும், கடும் வெய்யிலிலும் செல்லமுடியாத குதிரைகள்கூட (இடையே கடக்க நேர்ந்த) சேற்றுப் பாதையில், மைதானத்தில் நடப்பது போல் (எளிதாகச்) சென்றன.

हिंस्रा व्याघ्रादयस्तद्वदुरगा भयहेतवः ।
न दृष्टिविषयं याता रामराजानुयायिनाम् ॥ २८ ॥

புலி முதலிய கொடூர விலங்குகளும், அச்சமூட்டக்கூடிய பாம்புகளும், ராஜாராமனுடைய பரிவாரங்களின் கண் பார்வையில் தென்படவில்லை.

ये रामराजानुगताः सर्वे ते पुण्यशालिनः ।
गच्छतस्तस्य सा रात्रिरल्पिकेवाभवत्तदा ॥ २९ ॥

இராஜாராமனுடன் சென்றவர்கள் எல்லோரும் புண்ணியம் செய்தவர்கள். வழிநடந்து கொண்டிருந்த அவருக்கு அவ்விரவு சிறுபொழுது போலவே (சிரமம் ஏதும் இல்லாமல், இலகுவாகவே) கழிந்தது.

अथोदयाद्रितिलकेऽभ्युदिते दिननायके ।
कृष्णातटं समापेदे रामः स्वजनसंयुतः ॥ ३० ॥

உதயகிரி சிகரத்தில் செங்கதிரோன் தோன்றிய வேளையில், தன் பரிவாரங்களோடுகூட, (ராஜா)ராமன் கிருஷ்ணா நதிக்கரையை [1]அடைந்தார்.

तां कृष्णां स्वतनुं साक्षात् दृष्ट्वा हर्षसमाकुलः ।
स्वजनैः सहितो वीरः सस्नौ तत्र यथाविधि ॥ ३२ ॥

தனது உடலாகிய அந்தக் கிருஷ்ணா நதியை நேரில் கண்ணால் கண்டு, மகிழ்ச்சியடைந்து, தனது பரிவாரங்களுடன் விதிமுறைப்படி[2] அவ்வீரர் (இராஜாராமன்) நீராடினார்.

सन्तर्प्य पितृदेवांश्च नरदेहं विडम्बयन् ।
ततो नृपानुगाः सर्वे तर्तुं कृष्णां समुद्यताः ॥ ३२ ॥

அரசர் திருமாலின் அவதாரம் என்பதால் நீர் வடிவான உடலாகிய கிருஷ்ணா நதியைக் கண்டு மனித உடல்மீது அருவருப்படைந்து நீராடி பிதிரர்களுக்கும், முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் நீர்க்கடன் செய்தார். பிறகு அரசனைத் தொடர்ந்து வருவோர் அனைவரும் கிருஷ்ணா நதியைக் கடப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டார்கள்.

कृतप्रयत्ना अपि ते नोपायमुपलेभिरे ।
अथ भूवरः श्रीमान् स्वानुभावप्रवर्तितः ॥ ३३ ॥

स्वभृत्यानित्यवोचन्मे भवन्तो भवतानुगाः ।
सर्वेषां पुरतो भूत्वा परं पारं ययौ नृपः ॥ ३४ ॥

அவர்கள் எவ்வளவோ முயன்றும் ஆற்றைக் கடப்பதற்கு எந்த வழியும் புலனாகவில்லை. அப்போது, திருவுடை மன்னர், தனது மகிமையின் பயனாகச் செயல்பட்டவராய் தன் பணியாட்களிடம் இவ்வாறு கூறினார்: "நீங்கள் எல்லோரும் என்னைப் பின்தொடருங்கள்" என்றுகூறி (அவர்) எல்லோருக்கும் முன்னே சென்று எதிர்க்கரையை அடைந்தார்.

सर्वेऽप्यनुययुः शीघ्रं जानुदघ्नजलास्तदा ।

---

1. 1689ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந் தேதி.
2. ஆற்று நீரில் ஸ்நானம் செய்யும் விஷயத்தில் சில விதிமுறைகள் கடைபிடிக்கவேண்டும். அவ்வழிமுறைகளைப் பின்பற்றி நீராடினான் என்பது கருத்து. மண், நீர், நெருப்பு, காற்று, வானம், சூரியன், சந்திரன், ஆத்மா யாவும் தெய்வத்தின் உடல் அல்லவா!

எல்லோரும் விரைவாக மன்னரைப் பின்தொடர்ந்து சென்றனர். கிருஷ்ணா நதி நீர் அவர்களுக்கு முழங்கால் அளவே இருந்தது.

एवं गच्छन् महाराजः पथि म्लेच्छेशगोपिते ॥ ३५ ॥

नानाविधजनैर्युक्तः पुनः प्राप सरिद्वराम् ।

இவ்விதம் மிலேச்ச மன்னனின் ஆட்சிக்கு உட்பட்ட ராஜ்யத்தில் பயணம் செய்த அரசன் பலவிதமான இயல்புள்ள ஜனங்களுடன் மறுபடியும் ஒரு பெரிய ஆற்றையடைந்தான்.

कर्णाटदेशगमनं कलिकन्दनिकृन्तनम् ॥ ३६ ॥

म्लेच्छराजः कुमतिमान् वर्तते भण्ड(भट)शासनः ।

श्रीरामराजयात्रायां यदि विघ्नं न कुर्महे ॥ ३७ ॥

ज्ञात्वास्माञ्छत्रुपक्षीयान् घातयिष्यति निश्चितम् ।

மன்னர் ராஜாராமனின் கர்னாடகப் பயணம் கலியின் வேரைப் பிடுங்கி யெறியக் கூடியது என்பதை மிலேச்ச மன்னரின் ஆட்களால் கண்டறிப்பட்டது. "இந்த மிலேச்ச மன்னன் முட்டாளாக — கெட்ட மதிபடைத்தவனாக இருக்கிறான். நாம் ராஜாராமனின் இக்கர்னாடகப் பயணத்தைத் தடுத்து நிறுத்தாவிட்டால் நம்மையும் சத்ருக்களின் கட்சியைச் சேர்ந்தவர் என்று கருதி நிச்சயம் கொன்றுவிடுவான்".

इत्येवं निश्चितधियः पथि विघ्नान्यकुर्वत ॥ ३८ ॥

என்று உறுதியான எண்ணம் கொண்டவர்கள் வழியில் அரசனுக்குத் தடைகளைச் செய்தார்கள்.

सेनापतिस्तदा तस्य दैवहीनोऽर्थतत्परः ॥ ३९ ॥

नृपतत्वानभिज्ञोऽसौ पश्चाद्गतिमुपाययौ ।

तद्वीसमधियोऽन्येऽपि तामेव गतिमन्वयुः ॥ ४० ॥

தெய்வத்தின் அருள் இல்லாதவனும், பொருளாசை கொண்டவனுமான அந்த படைத்தலைவன், அரசரின் திட்டத்தை அறியாமல், பின்தங்கிவிட்டான். அவனைப் போன்றே எண்ணமுடைய பிறரும் அதே வழியைப் பின்பற்றினர்,

तेषां तथा गतिं श्रुत्वा नारेभ्यो भीमविक्रमः ।

स्थिरबुद्धिर्महातेजाः धैर्यान्न चलति स्म सः ॥ ४१ ॥

பேராற்றல் உடையவரும், உறுதியான எண்ணம் கொண்டவரும், ஒளி மிக்கவருமான மன்னர் ராஜாராமர் அவர்கள் அப்படிச் சென்றுவிட்டதை ஒற்றர்கள் மூலம் அறிந்து, தன் தைரியத்தைத் தளரவிடவில்லை.

ततः श्रीरामसेवायै भैरजीकः समागमत् ।
युतो मल्लजिता भ्रात्रा वरघोरफडान्वयः ।। ४२ ।।

அப்போது, சிறந்த கோர்படே குலத்துதித்த பஹிர்ஜீ கோர்படே, தன் சகோதரன் மாலோஜீ கோர்படேயுடன், அரசரின் ஆணைப்படி பணிசெய்யும் பொருட்டு வந்துசேர்ந்தார்.

कपीन्द्रतुल्यसामर्थ्यः स्वसैन्यपरिवारितः ।
राजारामस्य चरणावानम्य स्थिरभक्तिमान् ।। ४३ ।।

नृपमूचे महाबाहुः साहसी रिपुमर्दनः ।
मया ह्यनुचरेण त्वं महाराजहितैषिणा ।। ४४ ।।

அனுமனுக்கு நிகரான அறிவாற்றலுள்ளவரும், தனது படையோடு கூடியவரும் (அரசரிடம்) உறுதியான பக்தி கொண்டவரும், சாகசம் புரிபவரும், எதிரிகளைக் கலங்கச் செய்பவருமாகிய அவர் (பஹிர்ஜீ கோர்படே) ராஜாராமருடைய பாதங்களில் வணங்கிக் கூறினார்: "மாமன்னரின் நலனைக் கோருபவனும், தங்களைப் பின்பற்றுபவனுமான என்னால், வணங்கப்படுகிறீர்கள். (நான் தங்கள் ஆணைப்படி நடப்பேன்)".

सेवितः सचिवैः सर्वैर्व्रज कर्णाटकं प्रति ।
मार्गे ये समुदेष्यन्ति विघ्नास्तान् त्वत्प्रसादतः ।। ४५ ।।

निवारयिष्यामि विभो भवत्पदसमाश्रयः ।

"(மற்றும்) எல்லா அமைச்சர்களும் சூழ, கர்நாடகத்தை நோக்கிச் செல்லுங்கள். வழியில் ஏற்படும் இடைஞ்சல்களை, தங்கள் சேவகனாகிய நான், தங்கள் அருளினால் தடுத்துவிடுவேன், ஐயனே!"

ततः सरिद्वरां तीर्त्वा राजारामो द्विजैर्वृतः ।। ४६ ।।
ससैन्यभैरजीकेन युक्तः प्रायात्पथः क्रमात् ।

பின்னர், புனிதமான நதியைக் கடந்து, அந்தணர்களுடனும், படையுடன் கூடிய பஹிர்ஜீயுடனும், இராஜாராமன், பாட்டையில் முன்னேறிச் சென்றார்.

मार्गे मार्गे म्लेच्छपतेः सैन्यपाला बलैर्वृताः ॥ ४७ ॥

सर्वान्पथः समावृण्वन् राजाराममजिघृक्षया ।
तैः सार्धं सङ्गरं चक्रुस्तत्र तत्र मदोद्धताः ॥ ४८ ॥ ४८ ॥

प्रासहस्ता महाराष्ट्रा रामप्रियचिकीर्षया ।

மிலேச்ச மன்னனின் படைப்பொறுப்பாளர்கள் படைசூழ, இராஜா ராமனைக் கைப்பற்றும் விருப்பத்துடன், எல்லா வழிகளையும் மறித்து நின்றார்கள். (இராஜா)ராமனுக்கு இனியதைச் செய்ய விரும்பிய, ஆயுதந் தாங்கிய, மதம் கொண்ட மகாராஷ்ட்ர வீரர்கள், ஆங்காங்கே அவர்களுடன் சண்டையிட்டார்கள்.

बहु युद्ध्वा महावीरा म्लेच्छसेनाधिपैः सह ॥ ४९ ॥

तेषां सैन्यं च बहुलं स्वीयमल्पं प्रबुध्य ते ।

மிலேச்சப் படைத்தலைவர்களுடன் கடுமையாகப் போரிட்ட மகாவீரர்கள், அவர்களுடைய படைபலம் மிகவும் அதிகமாகவும், தங்களுடையது குறைவாகவும் இருப்பதை அறிந்து;

चिन्ताविष्टाः परिश्रान्ताः क्षुत्क्षामाः श्रान्तवाहनाः ॥ ५० ॥

यदा जातास्तदा रामप्रभावेण प्रवर्तितौ ।
भवशालो रूपसिंह्यः स्वसैन्येन समन्वितः ॥ ५१ ॥

जगत्स्थापकसन्ताजिद्धीरौ वीरबलाधिकौ ।
पालितौ शिवराजेन तदानृण्याय सङ्गतौ ॥ ५२ ॥

महाराजं नमस्कृत्य महाबलपराक्रमौ ।
ऊचतुर्मधुरं वाक्यं म्लेच्छा ये त्वज्जिगीषवः ॥ ५३ ॥

परापतन्ति परितः सन्नद्धा युद्धदुर्मदाः ।
आत्मप्राणान्पणीकृत्य तानावां विजयावहे ॥ ५४ ॥

கவலையால் பிடிக்கப்பட்டு, களைப்படைந்து, பசியால் மெலிந்து களைத்துப்போன யானை—குதிரைகளை உடையவர்களாக இருக்கும்பொழுது (இராஜா)ராமனது பிரபாவத்தினால், தீரர்களும் மிகுந்த வீரமும், படை பலமும், பராக்கிரமும் உடையவர்களுமாகிய, சிவாஜியால் வளர்க்கப்பட்டு அதற்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காகத் தம் படைகளுடன்கூட வந்த

ரூபஸிம்ம போன்ஸ்லேயும், ஸந்தாஜீ ஜகதாப்பும், மாமன்னரைப் பணிந்து, இனிமையான சொற்களைப் புகன்றார்கள். யுத்தத்திற்கு ஆயத்த நிலையில் உள்ளவர்களும், சுற்றிலும் சூழ்ந்துள்ளவர்களும், தங்களை வெற்றிகொள்ள விரும்புகிறவர்களுமான இந்த மிலேச்சர்களை, எங்கள் உயிரையே பயணம் வைத்து நாங்கள் வென்றுவிடுவோம்.

प्राण: सर्वस्य जगतस्त्वं तु सर्वगतः प्रभुः ।
सुखं गच्छ महाराज दुष्टधीभिरलक्षितः ।। ५५ ।।

"தாங்கள், எல்லா உலகுக்கும் உயிர் போன்றவர்; எங்கும் செல்லக் கூடியவர்; (யாவும் அறிந்தவர்) தலைவர். கெடுமதியாளர்களின் கண்ணில் படமால், மாமன்னரே! இனிதே செல்க."

इत्थं श्रीरूपसिंहस्य सन्ताजीकस्य चोभयोः ।
श्रुत्वा वचस्तुतोषाऽसौ म्लेच्छसेनासमावृतः ।। ५६ ।।

மிலேச்சப் படையினால் சூழப்பட்டிருந்த அவர், ஸ்ரீ ரூபஸிம்மன், ஸந்தாஜீ ஆகிய இருவராலும் கூறப்பட்ட இந்தச் சொற்களைக் கேட்டு மகிழ்ந்தார்.

तदाभवन्महाजन्यं म्लेच्छानीकेन चोभयोः ।
पश्यत्सु सर्वलोकेषु राजारामे च पश्यति ।। ५७ ।।

எல்லா மக்களும், இராஜாராமனும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மிலேச்சப் படைக்கும் இவ்விருவர் படைகளுக்கும் இடையே பெரும்போர் மூண்டது.

म्लेच्छसेनां च महतीं वीक्ष्य भूमिपतिस्तदा ।
विचारयामास निजे निराधौ मनसीश्वरः ।। ५८ ।।

மிலேச்சப்படை மிகவும் பெரியதாக இருப்பதைக் கண்ட மண்ணாளும் நாயகர், சஞ்சலமடையாமல் மனத்திற்குள் ஆலோசனை செய்தார்.

एभिर्युद्धे कृते किं वा फलं स्यान्मम सम्प्रति ।
कुलाण्डपरिभूत्यर्थमवतारो ममाधुना ।। ५९ ।।
संजातः पृथिवीपृष्ठे तद्योग्यो गतिमाश्रये ।

"தற்போது இவர்களுடன் போர்புரிவதால் எனக்கு என்ன பயன் விளையும்? பூமியில் என்னுடைய இந்த அவதாரம், தகுதியற்ற, இழிந்தவரை அடக்குவதற்காகவே ஏற்பட்டிருக்கிறது. அதற்கேற்றதான செயல் திட்டங்களை மேற்கொள்கிறேன்.

यथा कथञ्चिदेते हि नियोज्या मतिदामभिः ।। ६० ।।

"எவ்வாறோ, ஒருவிதமாக "நைச்சிய"மாகப் பேசி இவர்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கவேண்டும்.

शीघ्रं कर्णाटकं गत्वा महोपायान्करोम्यहम् ।
निश्चित्यैवं स मतिमान् सन्ताजीकं चमूमुखे ।। ६१ ।।

संस्थाप्य रूपसिंहं तु समानीय पुरोऽगमत् ।

"விரைவாகக் கர்நாடகம் சென்று, நான், பெரும் திட்டங்களைத் திட்டுகிறேன்" என்று தீர்மானித்து, அறிவுடைய மன்னர், படைத்தலைமையில் ஸந்தாஜீயை நிறுத்திவிட்டு, ரூபஸிம்மனை அழைத்துக்கொண்டு முன்னே சென்றார்.

ग्रामान्घोषांश्च दुर्गाणि खेटखर्वटपक्कणान् ।। ६२ ।।

समतीत्य क्षितिपतिस्तुङ्गभद्रातटं ययौ ।

கிராமங்களையும், இடையர் குடியிருப்புக்களையும் கோட்டைகளையும், சிற்றூர்களையும், மலைப்பள்ளத்தாக்கில் அமைந்திருந்த ஊர்களையும், சண்டாளர் வசிக்கும் இடங்களையும் கடந்து, துங்கபத்ரையின் கரையை மன்னர் அடைந்தார்.

अगाधां सरितं ज्ञात्वा पुनर्म्लेच्छांश्च पृष्ठगान् ।। ६३ ।।

दुष्टांश्च विषयाधीशान् सेनाधीशमिदं जगौ* ।

ஒருபுறம் நதி வெகு ஆழமானது என்பதையும், மறுபுறமோ அந்நியப் படையினர் பின்னே துறத்தி வருகிறார்கள் என்பதையும், அந்தப் பிரதேசத்திலுள்ள தலைவர்கள் துஷ்டர்களாக (தனக்குச் சாதகமாக இல்லாதவர்களாக) இருப்பதையும் அறிந்து சேனாபதியிடம் இவ்வாறு கூறினார்.

रूपसिंह महाबाहो त्वमेको बहवः परे ।। ६४ ।।

नायं देशो युद्धयोग्यः कालश्च बलवानयम् ।
मया सह समागच्छ मास्तु ते मानसी व्यथा ।। ६५ ।।

"வீர! ரூபஸிம்ம! நீயோ தனி ஆள்; மாற்றாரோ பலர். இந்த இடமும் போர்புரிவதற்கு ஏற்றதாக இல்லை. (இப்போது) காலம் (விதி)தான் பலமுடையது. (எனவே) என்னுடன் வந்துவிடு; மனத்தில் வேதனைப்பட வேண்டாம்".

---

* जगौ told in a singing tone.

क्षितिपेन समादिष्टः क्षत्रधर्मपरायणः ।
रूपसिंह्मः पदादेकान्न चचाल दृढव्रतः ॥ ६६ ॥

—என்று, மன்னனால் ஆணையிடப்பட்ட ரூபஸிம்மன், க்ஷத்ரியக் கடமை தவறாதவனாய், உறுதிபூண்டவனாய், ஓர் அடிகூட அசையவில்லை.

अवादीत् भूपतिं चैवं महाराज दयानिधे ।
अमानुषस्त्वं भूपालः स्वेच्छागतिमवाप्नुहि ॥ ६७ ॥

மாமன்னரை நோக்கி, இவ்வாறு கூறினான்: "உலகாள்பவரே! தாங்கள் அதிமானுடத்தன்மை படைத்தவர்: தம் விருப்பம்போல் செய்ய வல்லவர்.

पालयन् च जनान् सर्वान् स्वराज्यं प्राप्नुहि द्रुतम् ।
त्वया सह समागच्छे यद्यहं तर्हि भूपते ॥ ६८ ॥

यवनैरावृताः सर्वे विनश्यन्ति न संशयः ।

"தாங்கள் எல்லா மக்களையும் காப்பாற்றுவதுடன், நிச்சயம் தங்கள் அரசையும் அடைவீர்கள். (ஆனால், தங்கள் சொற்படி) தங்களுடன் நான் வருவேனேயானால், மன்னவரே! முகலாயர்களால் சூழப்பட்டிருக்கும் எல்லோரும் ஐயமில்லாமல் அழிந்துபோவார்கள்".

इत्थं श्रीरूपसिंह्मस्य वचः श्रुत्वा महीपतिः ॥ ६९ ॥
मानयामास तं भूयो म्लेच्छानीकोपवेष्टितः ॥ ७० ॥

—என்ற. ஸ்ரீ ரூபஸிம்மனுடைய சொற்களைக் கேட்ட மன்னர், மீண்டும் தாம் மிலேச்சப் படையினால் வளைக்கப்பட்டிருப்பதைத் தெரிந்துகொண்டு, அவனை வெகுவாகப் பாராட்டினார்.

तदा महेशं परमादरेण स्मृत्वा भवानीमपि भूमिपालः ।
पुरो ददर्शाद्भुतरूपवेषौ वैश्यद्विजौ नन्दिसमं वृषं च ॥ ७१ ॥

அப்போது, பரம்பொருளான பரமேஸ்வரனையும், பவானியையும் மனப்பூர்வமாகத் துதித்த அரசர், தன்னெதிரில் அற்புதத் தோற்றம் கொண்ட ஒரு வணிகரையும், ஒரு வேதியரையும், நந்தியெம்பெருமானை நிகர்த்த ஒரு காளையையும் கண்டார்.

॥ इति श्रीराजारामयशःप्रबन्धचरिते काव्ये केशवपण्डितकृतौ चतुर्थः सर्गः ॥

கேசவபண்டிதரால் இயற்றப்பட்ட ராஜாராமர் புகழ்கூறும் வரலாற்றுக் காவியத்தில் நான்காவது ஸர்கம் முற்றிற்று.

## ॥ पञ्चमः सर्गः ॥

## ஐந்தாவது ஸர்கம்

अथ म्लेच्छपतेः सैन्यैर्वेष्टिते स्वीयमण्डले ।
पुरो विधाय वृषभं समालम्भ्य च पाणिना ॥ १ ॥

தனது படையினர், மிலேச்சத் தலைவனின் படையினால் சூழப்பட்டு இருக்கையில், விருஷபத்தை முன்னால் நிறுத்தி கையினால் அணைத்துத் தழுவி[1],

तद्वृषस्पर्शतोऽलक्ष्यः स बभूव दुरात्मनाम् ।

அவர் அந்த ரிஷபத்தைத் தொட்ட அளவிலே தீயவர்களுக்குப் புலப்படாதவாறு ஆனார்.[2]

भैरजीकमुवाचेदं राजा मतिमतां वरः ॥ २ ॥

அறிவாளிகளில் சிறந்தவரான மன்னர் பஹர்ஜீயிடம் இவ்விதம் கூறினார்:

भैरजीक महावीर म्लेच्छाक्रान्ते स्वमण्डले ।
निःसर्तुं नास्ति मार्गोऽत्र तथापि प्रव्रजामहे ॥ ३ ॥

"பஹிர்ஜீ! பெருவீரனே! மிலேச்சர்களின் பிடியில் நமது படை சிக்கியுள்ளபொழுது இங்கிருந்து தப்பி வெளிேற்றுவதற்கான வழி ஏதும் இப்போது புலப்படவில்லை; அப்படியிருந்தும் புறப்படுகிறோம்.

भृङ्गिरिटी हि वैश्योऽयं नन्दीशोऽयं वृषस्त्वयम् ।
जयदेवसुतः साक्षात् त्र्यम्बकप्रमथस्त्वयम् ॥ ४ ॥

"ஜயதேவருடைய மைந்தரான இந்த வணிகர், பிருங்கி முனிவரே; இவர் நந்தீஸ்வரரே; இவரே வ்ருஷபதேவர்; சாக்ஷாத் திரியம்பகரின் பிரதம கணத்தைச் சேர்ந்தவரே.

---

1. ஒரு முக்யமான பயணத்தைத் தொடங்கும் முன்னர், இப்படி ஒரு காளையை(ச் சொரிந்து கொடுத்து). முன்னிட்டுக் கொண்டு செல்வது ஒரு நன்னிமித்தமாகக் கருதப்பட்டு இருக்கலாம்.

2. अष्टानां लोकपालानां मात्राभिर्निर्मितो नृपः என்பதால் அரசனுக்கு இறையம்சம் உண்டு என்பதைக் கவிஞர் வலியுறுத்துகிறார். "மன்னன், எதிரிகள் பார்வையில் சிக்க வில்லை" என்று பொருள்.

शम्भुना प्रेषितो मेऽद्य मार्गदर्शनहेतवे ।
यथा दाशरथेः प्राप्ते सङ्कटे मारुतात्मजः ॥ ५ ॥

तत्तत्समयकृत्येषु साहाय्यं कृतवान्पुरा* ।
तथेदानीं त्वया कार्यं वीराग्रण्येन साधुना ॥ ६ ॥

मद्भक्तियुक्तचित्तेन मत्सेवानुविधायिना ।
अवतारचरित्रं ते प्रथामायास्यति ध्रुवम् ॥ ७ ॥

"இப்போது எனக்கு வழிகாட்டுவதற்காகப் பரமேஸ்வரனால் அனுப்பப்பட்டிருக்கிறார். தசரத குமாரனாகிய இராமனுக்குச் சங்கடங்கள் ஏற்பட்ட போது, அந்தந்தச் சமயத்துக்கேற்ற உதவிகளை வாயு குமாரனான ஆஞ்ஜநேயர் முன்பு செய்தார். அதேபோல, இப்போது மென்மையான உள்ளம் கொண்ட, வீரர்களில் முதல்வரான, என்னிடம் பேரன்புடைய, எனது பணியில் ஊன்றி நிற்கிற உன்னால் செய்யப்படவேண்டும். அவதாரத்தின் முக்கிய நிகழ்ச்சி உனக்கும் நிச்சயம் பெரும்புகழைத் தரப்போகிறது.

इति संश्रावितो राज्ञा भैरजीकः पुरातनम् ।
वृत्तमत्यद्भुतं वीरो गमने बुद्धिमादधौ ॥ ८ ॥

இவ்வாறு வியப்பூட்டும் பண்டைய வரலாற்றை அரசரிடமிருந்து கேட்டதும், அவ்வீரர் (அரசரின் ஆணைப்படி) புறப்படுவதில் சிந்தனையைச் செலுத்தினார்.

तिष्ठत्सु म्लेच्छमुख्येषु सर्वतः सबलेष्वपि ।
तथा कण्टकजालेषु पथिषु प्रसृतेष्वपि ॥ ९ ॥

नृपोपकरणैः सर्वैः सहितः समयोचितैः ।
शस्त्री सनाथः सुभुजः साहस्यमितविक्रमः ॥ १० ॥

---

* இராமனுக்குப் பலவிதங்களிலும் அனுமான் உதவியாக இருந்தார் என்று ராமாயணத்தில் வருகிறது. ஆனால், இங்கே

सुग्रीवन्तु ततः प्राह रामं सत्यपराक्रमम् ।
हनुमन्तं त्वमारोह अङ्गदं चापि लक्ष्मणः ॥ [युद्ध xxii-82]

भिक्षुरूपं परित्यज्य वानरं रूपमास्थितः ।
पृष्ठमारोप्य तौ वीरौ जगाम कपिकुञ्जरः ॥ [किष्किन्धाकाण्डे iv-34]

என்று, இராமரைத் தன் தோளில் சுமந்து சென்ற நிகழ்ச்சிகள் குறிப்பாக உணர்த்தப்படுகின்றன.

स्कन्धेनादाय नृपतिं पुप्लुवे म्लेच्छमध्यतः ।
न तं बबाधे कश्चिद्धि रामतेजोपबृंहितम् ॥ ११ ॥

மிலேச்சப் படைத்தலைவர்கள் (தத்தம்) படைகளோடு சுற்றிலும் நின்றுகொண்டிருந்தபோதிலும், (செல்லும்) வழியில் முள் வலைகள் விரிக்கப் பட்டிருந்தபோதிலும், (இக்கட்டான) அந்தச் சமயத்துக்கு ஏற்றதும், அரசருக்குத் தேவையானதுமான உபகரணங்களுடன், ஆயுதம் தாங்கியவரும், வலுவான புஜங்களை உடையவரும், வீரச்செயல் புரிபவரும், எல்லையற்ற ஆற்றல் கொண்டவருமான அவர், மிலேச்சர்களுக்கிடையிலிருந்து, அரசரைத் தோளில் தூக்கிக்கொண்டு நதியைக் கடந்து சென்றார். (இராஜா)ராமருடைய ஒளியினால் சூழப்பட்டிருந்த அவரை எதுவுமே பாதிக்கவில்லை.

अथ भूपानुगाः सर्वे प्रस्थिते सति भूपतौ ।
अभिदध्युः शिवं राज्ञश्चिन्ताभयसमन्विताः ॥ १२ ॥

மன்னர் புறப்பட்டுச் சென்றதும், அவருடன் வந்திருந்த அனைவரும் கவலையும், அச்சமும் கொண்டு, அரசரின் நலனைக்கோரி இறைவனிடம் பிரார்த்தித்தார்கள்.

कथं गच्छामहे(?) सर्वे म्लेच्छसागरमध्यतः ।
पुनश्च राजचरणौ कदा द्रक्ष्यामहे वयम् ॥ १३ ॥

"மிலேச்சக் கடலின் நடுவிலிருந்து நாம் எல்லோரும் எவ்வாறு (தப்பிச்) செல்வோம்? மறுபடியும், நாம் எப்போது மன்னரின் திருப்பாதங்களைக் காணப்போகிறோம்?" (மன்னரின் திருவடிகளில் வணங்கப்போகிறோம் என்று வருந்தினார்கள்.)

ततस्ते भिन्नमनयस्तत्काष्ठाकृतबुद्धयः ।
केचित्कार्पटिका वेषाः दीनवेषधराः परे ॥ १४ ॥

பலவகையான கருத்துக்களில் உறுதியாக இருந்த அவர்கள் அந்த சந்தர்பத்திற்கேற்றவாறு தீர்மானம் செய்துகொண்டு யாத்ரிகர் போலவும் மற்றும் சிலர் யாசகர் போலவும் (வேஷம் போட்டுக்கொண்டார்கள்).

केचित्तत्रैव न्यवसन् सुगुप्ता ग्रामवासिभिः ।
मुनिवेषधराश्चान्ये वैश्यवेषधराः परे ॥ १५ ॥

சிலர் அங்குள்ள கிராமவாசிகளால் நன்கு மறைக்கப்பட்ட (அடைக்கலம் அளிக்கப்பட்ட) சிலர் அங்கேயே தங்கிவிட்டார்கள். சிலர், முனிவர்களைப் போலவும், மற்றும் சிலர் வணிகர்களைப் போலவும் வேஷம் தரித்து,

सन्तेर्विषमाम्भोधिं राजारामप्रभावतः ।

இராஜாராமனின் பிரபாவத்தினால் துன்பக் கடலைக் கடந்தார்கள்.

राजारामस्तु सकलं सैन्यसागरमत्यगात् ॥ १६ ॥

இராஜாராமரோ, சைனியக் கடலை முற்றிலுமாகக் கடந்து சென்றார். (மன்னருடன் வந்தவர்கள் உயிர் பிழைப்பதற்காகப் பலப்பல மாறுவேடம் போடவேண்டியிருந்த ஆபத்துக் காலத்தில்கூட, அரசன் தனது தெய்விக சக்தியினால், சாமர்த்தியமாக சூழ்ந்திருந்த ஆபத்துக்களுக்கு ஆட்படாமல் வெளியேறிவிட்டான் என்று, அரசனின் பெருமையை வெளியிடுகிறார், கவிஞர்.

श्रीभैरवेण सहितस्तुङ्गभद्रामतीतरत् ।

तुङ्गभद्राम्भसि स्नात्वा संतर्प्य पितृदेवताः ॥ १७ ॥

துங்கபத்ரையில் நீராடி, பிதிரர்களுக்கும் தேவர்களுக்கும் நீர்க்கடன் செலுத்தி; ஸ்ரீ பஹிர்ஜீயுடன் கூட, மன்னர் நதியைத் தாண்டிச் சென்றார்.

भुक्त्वा यथेच्छं तत्तीरे भैरजीकहृतक्लमः ।

धात्रीकृत्यं भृत्यकृत्यं मित्रकृत्यं तथैव च ॥ १८ ।

स्नेहसंबन्धिनां कृत्यं कृतवान्भैरवस्तथा ।

அதன் கரையில் பஹிர்ஜீ, அரசனின் சிரமங்களைப் போக்கடித்தார். செவிலித்தாயின் செயல்களையும், பணியாளுக்குரிய செயல்களையும், நண்பர்களுக்கான செயல்களையும் செய்தார். மன்னர், தாம் விரும்பியபடி உணவு கொண்டார். (செவிலித்தாய், பணியாள், நண்பன், சம்பந்தி ஆகிய உறவு நிலையில் நின்று பஹிர்ஜீ பணிவிடை செய்தார்.)

स्वाद्वन्नैः स्वादुपेयैश्च स्वादुभक्ष्यैर्मनोरमैः ॥ १९ ॥

ताम्बूलसंप्रदानैश्च सुस्वादुवचनैस्तथा ।

खाद्यैर्नानाविधैस्तद्वत्पादसंवाहनादिभिः ॥ २० ॥

उपाचरन्महाराजं मार्गक्लेशासहं विभुम् ।

சுவையான உணவுகளாலும், சுவையான பானங்களாலும், சுவையானதும் மனம் விரும்பியதுமான தின்பண்டங்களாலும், தாம்பூலம் கொடுப்பதாலும், மிகவும் இனிய சொற்களாலும், பற்பல வகையான உண்பொருள்களாலும், காலைப் பிடித்துவிடுவதாலும், பயணக்களைப்பைத் தாங்கமுடியாத அரசரை உபசரித்தார்.

गच्छतस्तस्य राजर्षेर्मार्गे तिग्मरुचिस्तथा ॥ २१ ॥

न चातिसन्तप्तकरः संबभूव यतात्मनः ।
भूमिर्मार्दवेन शैत्येन चापां स्पर्शेन मारुतः ॥ २२ ॥

वितानक्रिययाकाशं छायाभिस्तरवस्तथा ।
ऋतवः फलपुष्पैश्च भूमिपालं निषेविरे ॥ २३ ॥

பொறிகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த ராஜரிஷி (என்று கூறத்தக்க இராஜாராமன்) பயணம் செய்தபோது சூரியன் மிகவும் வெப்பம் பொழிப வனாக இல்லை. பூமியானது மென்மையாக இருத்தலாலும், காற்று, குளிர் நீரில் தவழ்ந்து வந்ததால் குளிர்ந்த ஸ்பர்சத்தாலும், ஆகாயம் திறந்தவெளியில் வான்விரிப்பாகவும், மரங்கள் நிழலைக் கொடுத்தலாலும், பருவ காலங்கள் உரிய பழங்களாலும் மலர்களாலும் அரசனை சேவித்தன.

नृत्तैर्मयूराश्च पिकाः कलालापैर्मृगव्रजाः ।
प्रदक्षिणप्रक्रमणैर्मनो जह्रुर्महीपतेः ॥ २४ ॥

மயில்கள் நடனத்தாலும், குயில்கள் இனிய குரலாலும், மான்கள் வலம் வருவது போன்ற நடையழகாலும் மன்னரின் மனத்தைக் கவர்ந்தன.

नानावर्णास्तथा गावः सवत्सा गोपपालिताः ।
उक्षाणश्च सुपुष्टाङ्गाः दर्शनान्नुनुदुः क्लमम् ॥ २५ ॥

இடையர்களால் வளர்க்கப்பட்ட பல நிறமுடைய கன்றோடு கூடிய அழகான, வாளிப்பான உடலமைந்த பசுக்களும் மற்றும் எருதுகளும் தோற்றத் தினாலேயே களைப்பைப் போக்கின.

गायन्त्यो रामचरितं पथि हलिककन्यकाः ।
सुस्वरैश्च हरन्ति स्म महीपतिमनःक्लमम् ॥ २६ ॥

செல்லும் வழியில் விவசாயிகளின் பெண்கள், தம் இனிய குரலால் ராம சரிதத்தைப்பாடி* அரசரின் மனத்தளர்ச்சியைப் போக்கினார்கள்.

म्लेच्छगामी ससेनायां स्त्रीणामस्यजभूपः ।
कदाचिदागनस्तत्र स्यवमद्भैर्यान्वितः ॥ २७ ॥

---

* புகழ்பெற்ற ராமாயணத்தைப் பாடினார்களா அல்லது இந்த ராமனின் பிரபாவச் சிறப்புக்களைப் பாடினார்களா? என்று தீர்மானிக்கும் வேலையை, சாதுர்யமான சொல்லாட்சியால், வாசகர்களிடம் விட்டுவிட்டார், கவிஞர்!

பஹிர்ஜீ கோர்படேயின் பாதுகாப்புடன் ஒருவாறாகத் தனது எல்லையைக் கடந்து (இரவோடு இரவாகத் துங்கபத்திரையைக் கடந்து) காஸிம் கான் தண்டு இறங்யிருந்த பிரதேசத்தை அரசர் அடைந்தார்.

गच्छन्नापणवीथीषु मिलन्नपि च सैनिकैः ।
संचरन्(?) राजमार्गेऽपि धनिभिः संवदन्नपि ॥ २८ ॥

क्रीणन्नपि शुभानश्वान् रत्नानि विविधान्यपि ।
वितरन्नपि दीनेभ्योऽनुरूपं तुष्टिदं धनम् ॥ २९ ॥

नविज्ञातो गूढचारैश्चारैरपि दुरात्मनः ।
कासीमस्य महाराजप्रभावेण विमोहितैः ॥ ३० ॥

கடை வீதிகளில் சென்றுகொண்டும், வீரர்களுடன் கூடிக்கொண்டும், ராஜபாட்டைகளில் அலைந்துகொண்டும், பிரபுக்களுடன் சல்லாபித்துக் கொண்டும், நல்ல குதிரைகளையும், பல்வகை இரத்தினங்களையும் விலைக்கு வாங்கிக்கொண்டும், வறியர்கள் நிலைமைக்கு ஏற்பவும், அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும்படியாகவும் பணத்தைக் கொடுத்துக்கொண்டு இருந்தபோதிலும், மாமன்னரின் பிரபாவ சக்தியினால் மயங்கியிருந்த கெடுமனம் படைத்த காஸிம்கானுடைய ஒற்றர்களால் (அவர்) அறியப்படவில்லை.

एवं यथासुखं गच्छन्निर्भयः परवीरहा ।
अविज्ञातः कुमतिभिर्ग्रामेषु नगरेषु च ॥ ३१ ॥

இவ்விதமாக, எதிரிகளை மாய்க்கின்ற அவர், அச்சமில்லாமல், தன்னிச்சைப்படி சிற்றூர்களிலும், நகரங்களிலும் சென்றுகொண்டிருந்த போதிலும் துன்மதியாளர்களால் அறியப்படவில்லை.

दाशरथ्यवतारे हि चतुर्दश समाः स्वयम् ।
सीतयानुगतः पत्न्या वनवासमकल्पयत् ॥ ३२ ॥

தசரத குமாரனாக அவதரித்தபோது, மனைவியான ஸீதையால் பின்தொடரப்பட்டு, பதினான்கு ஆண்டுகள் வனவாசத்தைத் தாமே மேற்கொண்டார்.

अस्मिन्किलावतारे तु कतिभिर्दिवसैः प्रभुः ।
एकाकी वनवासं तु व्यपाक्रामत्सुखोचितः ॥ ३३ ॥

இந்த (ராஜாராம) அவதாரத்தில், தான் மட்டுமே சில நாட்களுக்கு வனத்தில் இருப்பது[1] என்னும் விளையாட்டு தன் நலனுக்குத் தேவை என (சங்கற்பித்து, அதனை) மேற்கொண்டார்.

ततः स्वदेशनिकटे समागच्छन् धृतव्रतः ।
अमूरनगरस्यायं देवालयमुपाययौ ॥ ३४ ॥

விரதம் மேற்கொண்டிருந்த அவர், தம் நாட்டின் எல்லையை அடைந்ததும், அமூர் நகரத்தில்[2] ஒரு கோவிலை அடைந்தார்.

तत्र स्थित्वा महाराजो भैरजीकं गतक्लमम् ।
चित्तज्ञं सर्वशूराणां चारवेषं महाबलम् ॥ ३५ ॥

प्राहिणोत्काकडाख्यस्य वाजीरायस्य सन्निधौ ।

மாமன்னர் அங்கேயே இருந்துகொண்டு, களைப்பு நீங்கியவரும் பெரும் பலசாலியும் மாற்று வேஷம் பூண்டவரும் எல்லா சூரர்களுடைய உள்ளத்தையும் உணர்ந்தவருமான பஹிர்ஜீயை, பாஜீராய் காகடேயிடம்[3] அனுப்பி வைத்தார்.

भैरजीकस्तमभ्येत्य वृत्तं राज्ञः सविस्तरम् ॥ ३६ ॥

पाराशरान्निर्गमनं तुङ्गभद्रातटावधि ।
ससैन्यस्य महीभर्तुरागमं च समन्त्रिणः ॥ ३७ ॥

म्लेच्छैस्तस्यानुगमनं युद्धं दैनन्दिनं तथा ।
सर्वं तत्कथयामास तस्य चित्तविविस्मया ॥ ३८ ॥

பஹிர்ஜீ, அவரிடம் (காகடேயிடம்) சென்று, பன்னாலா கோட்டையிலிருந்து அமைச்சர்களுடனும், படையுடனும் மன்னர் புறப்பட்டு துங்கபத்ரை

---

1. பெட்னூர் நாட்டில் மறைந்திருந்தார் என்பது வரலாற்று ஆசிரியர்கள் துணிபு.

2. இந்தக் காவிய நிகழ்ச்சிகள் நடந்த பதினேழாம் நூற்றாண்டில், தமிழ்நாட்டின் வடபகுதியில் மராத்தியர் அரசு செலுத்தினர். அதனால்தான் "தன் நாடு" என்று சொல்லப்பட்டுள்ளது. அமூர் என்பது இன்றைய ஆம்பூராக இருக்கலாம்.

3. இவர், கர்நாடகத்திலிருந்த ஒரு மராத்திய சுபேதார். அந்தச் சமயத்தில் ஆம்பூர் அருகே முகாமிட்டிருந்தார்.

நதிக்கரையை வந்தடைந்தது வரையில், மிலேச்சர்களால் அவர் தொடரப் பட்டதும், தினந்தோறும் சண்டை நடந்ததும் ஆகிய எல்லாவற்றையும், அவன் மனத்தை அறியும் விருப்பமுடன் விரிவாக எடுத்துக் கூறினார்.

त्वं तु राज्ञश्छत्रपतेः प्रियः प्राणो बहिश्चरः ।
देशेऽस्मिन् स्थापितस्तेन स्वामिभक्तिं यदीच्छसि ।। ३९ ।।

तर्हीदानीं मया सार्धमेहि यत्र नृपोत्तमः ।
श्रुत्वा भैरववाक्यं तत्तत्तथेति च सोऽब्रवीत् ।। ४० ।।

"நீ சத்ரபதியாகிய மன்னருக்குப் பிரியமானவன்; வெளியே இருக்கும் அவருடைய பிராணன் போன்றவன்; இந்த நாட்டில், அவரால் நியமிக்கப் பட்டவன். யஜமானரிடம் உள்ள விசுவாஸத்தை வெளிப்படுத்த விரும்பினால் என்னுடன் மன்னர் இருக்குமிடத்துக்கு வா" என்று. பஹிர்ஜீ சொல்லியதைக் கேட்ட அவன், "சரி, அப்படியே" என்றான்.

तस्य निष्कलुषं चेतः स्वामिभक्तिं तथाविधाम् ।
ज्ञात्वा भूयश्च तं प्राह सार्थोऽत्र मम विद्यते ।। ४१ ।।

द्विजः कश्चित्तमभ्येत्य पुनरायामि तेऽन्तिकम् ।
सन्नद्धाः सर्व एवैते भवन्तु तव सैनिकाः ।। ४२ ।।

பஹிர்ஜீயினுடைய மாசற்ற மனத்தையும், யஜமான விசுவாசத்தையும் உணர்ந்துகொண்ட அவர், மீண்டும், என் வீட்டில் ஒரு தனிகரான அந்தணர் இங்கே என்னுடன் இருக்கிறார். (நான் போய்) அவரைச் சந்தித்து(ப் பேசி) விட்டு உன்னிடம் வருகிறேன். (அதற்குள்) உன்னுடைய இந்தப் படைவீரர்கள் அனைவரும் போருக்குத் தயாராவார்களாக" என்றார்.

इत्युक्त्वा नृपमभ्येत्य तच्चेष्टितमभाषत ।
तदाकर्ण्य नृपः प्राह तमिहानय सत्वरम् ।। ४३ ।।

என்று சொல்லிவிட்டு, மன்னரை அடைந்து, அங்கு நடந்ததைக் கூறினார். அதைக் கேட்ட மன்னர், "அவரை உடனே அழைத்து வா" என்றார்.

भूयोऽगमद्भैरजीकस्तत्सन्निधिमथावदत् ।
समागतो महाराज इति वार्ताहरा मम ।। ४४ ।।

वदन्ति दर्शनार्थं त्वं सोपायनकरस्त्वर(?) ।

பஹிர்ஜீ மீண்டும் அவரிடம் வந்து, "மன்னர் வந்துவிட்டார் என்ற செய்தி எனக்குக் கிடைத்திருக்கிறது. காணிக்கைப் பொருட்களைக் கையில் எடுத்துக்கொண்டு அவரைக் காண்பதற்கு உடனே புறப்படு" என்றார்.

तदा तस्य भटाः केचिज्जाताभिज्ञा महाबलम् ।। ४५ ।।

भैरजीकं जानते स्म तद्रवासिव्रणादिभिः ।
सर्वेऽप्येनं मिलन्ति स्म प्रणामालिङ्गनादिभिः ।। ४६ ।।

அப்போது, அவருடைய (பாஜீராவ் காகடே) பணியாளர்களில் சிலர், நினைவு வந்தவர்களாக பலம் மிகுந்த பஹிர்ஜீயை (அவருடைய) குரலைக் கொண்டும், கத்தியைக் கொண்டும், உடல் காயங்களைக் கொண்டும் அடையாளம் கண்டுகொண்டார்கள். அனைவரும் இவரை வணங்கியும் மார்புறத் தழுவியும் கூடி மகிழ்ந்தார்கள்.

काकडावाजिराजश्च तमालिङ्ग्य प्रहर्षितः ।

காகடாபாஜி ராவ் மன்னரும் அவரை அணைத்து மகிழ்ந்தார்.

तद्वाक्यसममेवासावुदतिष्ठत्ससैनिकः ।
क्व स्वामी मे महाराजः साम्प्रतं वर्तते सखे ।। ४७ ।।

அந்தச் சொற்களைக் கேட்டவுடனேயே இவன் வீரர்களோடு எழுந்து நின்றான். "நண்பரே, எனது தலைவராகிய மாமன்னர் இப்போது எங்கே இருக்கிறார்?"

श्रुत्वैनत्पुरतो भूत्वा विलसच्छूरिकाकरः ।
भैरवः प्राह तान् सर्वान् दर्शयन्जगतीपतिम् ।। ४८ ।।

இதைக் கேட்டு, கையில் கத்தியுடன் அவர்களுக்கு முன்னால் நின்று கொண்டு, அவர்கள் அனைவருக்கும் அரசர் இருக்குமிடத்தைக் காட்டியபடி பஹிர்ஜீ சொன்னார்:

अस्मिन् देवालये स्वामी वर्तते लघु गच्छत ।
इति वाक्यामृतेनैव सन्तुष्टाः काकडःदः ॥ ४९ ॥

यथाप्रधानं पुरतः शिरःश्चुम्बिमहीतलाः ।
उपायनानि पुरतो महार्हाणि निधाय ते ॥ ५० ॥

प्रणेमुस्तं महाराजं वीरत्रयगुणान्वितम् ।

"இந்தக் கோவிலில் தலைவர் இருக்கிறார், விரைந்து செல்வீர்களாக" என்ற அமுதுக்கொப்பான சொற்களாலேயே காகடே முதலியோர் மனம் மகிழ்ந்து, மிக உயர்ந்த காணிக்கைகளை முன்னதாக வைத்து, தலைமை பீடத்தில் உள்ளவர். எதிரில் தரையில் படும்படியாக மிகவும் குனிந்து செல்ல வேண்டிய முறைப்படி சென்று, பாசுராமர்—பலராமர்—ஜானகி ராமர் ஆகிய வீரர்கள் குணங்களோடு கூடிய அந்த மகாராஜரை வணங்கினார்கள்.

वाग्भिः कांश्चित्स्मितैः कांश्चित् दृशा कांश्चिदरिन्दमः ॥ ५१ ॥

सम्भावयामास नृपः सुभटांस्तत्र सङ्गतान् ।

அங்கே கூடியிருந்த வீரர்களில் சிலரோடு பேசியும், சிலரைக் கண்டு புன்முறுவல் செய்தும், பார்வையினாலேயே சிலரையும், மன்னர் உறவு கொண்டார்.*

अकारयन्महाराजः स्वस्त्यागमनसूचकान् ॥ ५२ ॥

वादित्रशव्दान् वहुशो नलयन्त्रमहाध्वनीन् ।

நன்மைகள் ஏற்படும் என்பதைக் குறிக்கும் முகத்தான் பலவித இசைக் கருவிகளின் இன்னொலியும், பெரும் குழாய் வாத்திய ஒலிகளையும், பேரிகைகளின் பேரோசையும் எழச்செய்தனர்,

---

* கவிஞர் கேசவ பண்டிதர், பண்டைய வடமொழிக் காவியங்களில் மிகுந்த பயிற்சியுடையவர் என்பதற்கு, இந்தச் செய்யுள் சான்று பகர்கிறது. காளிதாஸனின் "குமாரஸம்பவ"த்தில் பார்வதியை மணந்துகொள்வதற்காகத் தேவர்கள் உடன்வர' பரமேஸ்வரன் சென்றபோது,

कम्पेन मूर्ध्नः शतपत्रयोनिं वाचा हरिं वृत्रहणं स्मितेन ।
आलोकमात्रेण सुरानशेषान् संभावयामास यथाप्रधानम् ॥

என்ற வருணனைக் கவிதையின் கருத்தையும், சொற்களையும் கவிஞர் கையாண்டிருக்கிறார்.

तदा महानुत्सवोऽभूज्जनानां देशवासिनाम् ॥ ५३ ॥
धर्मराजागमे यद्वदिन्द्रप्रस्थनिवासिनाम् ।

(பாண்டவர் முதல்வரான) தருமபுத்திரரின் வருகையால் இந்திரபிரஸ்த நகர மக்கள் மகிழ்ந்து விழா எடுத்ததைப் போல, (இப்போது) மன்னர் வருகையை, நாட்டு மக்கள் விழாவாகவே கொண்டாடினார்கள்.

स्वराज्यं प्राप्य समृद्धं सर्वलोकनमस्कृतः ॥ ५४ ॥
प्रतिपच्चन्द्रसदृशः कलाभिर्ववृधे नृपः ॥ ५५ ॥

எல்லா குடிமக்களாலும் வணங்கப்பட்ட மன்னர், செழிப்பான தன் ராஜ்யத்தை அடைந்து, சுக்லபக்ஷ சந்திரன் கலைகளால் வளர்வதைப் போல வளர்ச்சி பெற்றார்.

एवं श्रीभयशालवंशतिलकः श्रीरामराजप्रभुः
दिल्लीशेन महाबलैः पथि कृतान् प्रत्यूहशैलानिव ।
सर्वान् म्लेच्छगणान्विमोह्य महसा श्रीवैष्णवेनाधुना
तेषामेव पराभवाय विजयी वर्वर्ति कर्णाटके ॥ ५६ ॥

இவ்விதமாக, ஸ்ரீ போன்ஸ்லே (போஸல) வம்ச திலகமான ஸ்ரீ ராமராஜ ப்ரபு, பலம் வாய்ந்த தில்லி அதிபதியால் (அவுரங்கஜீப்பினால்) இடையில் இழைக்கப்பட்ட மலைபோன்ற தடங்கல்களை, ஸ்ரீ விஷ்ணுவின் தேஜஸினால் (தெய்வீக அம்சம் அரசரிடம் உள்ளுறைத் தன்மையால் விளங்கி வந்ததால்) மிலேச்சக் கூட்டங்களை மதிமயங்கச் செய்து, அவர்களைத் தோற்கடிப்பதற்காகவே, வெற்றிச் சிறப்போடு கர்நாடகத்தில் வீற்றிருக்கிறார்!

॥ इति श्रीमन्महाराजाधिराजमहाराजछत्रपतिराजारामचरिते काव्ये केशवपण्डितकृतौ पञ्चमः सर्गः ॥

இத்துடன் கேசவபண்டிதரால் இயற்றப்பட்ட ஸ்ரீமன் மஹாராஜாதிராஜ மஹாராஜ சத்ரபதி ராஜாராம சரித காவியத்தில் ஐந்தாவது ஸர்கம் முற்றிற்று.

## AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library.' It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

**DIRECTOR,**
Sarasvati Mahal Library, Thanjavur.